பக்கங்கள் - 12 Registered as a Newspaper in Srilanka விலை 20/

# புதியவன்
පුදියවන් PUTHEYAVAN
ஊருக்கு நல்லது சொல்வேன்-உண்மை அறிந்து சொல்வேன்

◆பாதை 01 ◆பயணம் 115 ◆திருவள்ளுவர் ஆண்டு 2045 வைகாசி 07 வெள்ளி, 22/06/2014 ( TP- 0233238444 )

நித்திலம் பதிப்பகம்
#87 பிரதான வீதி, சின்னக்கடை
மன்னார்.
*டிஜிட்டல் பிறிண்டிங் (Banner & Sticker )
*Offset Printing (4 colours)
* இறப்பர் முத்திரை (Ruber stamp)
* Screen printing
*Mug printing
*Wedding Cardes
*Dero printing
*சகலவிதமான பதிப்பக வேலைகளுக்கும்.
தொலைபேசி:- 023-2223545,
மின்னஞ்சல் :- nithithilam31@gmail.com

www.putheyavan.com

# இஸ்லாமிய நாடுகள் இலங்கை மீது அதிருப்தி

## ஜனாதிபதி முஸ்லிம் அமைச்சர்களுடன் சந்திப்பு

(கொழும்பு)
இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்படும் வன்முறைகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டுமென குறித்த் முஸ்லிம் நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன.
முஸ்லிம்களுக்கு எதிராக அடக்குமறைகளை பிரயோகிப்போர் தண்டிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளன. சில முக்கியமான முஸ்லிம் நாடுகள் இலங்கைக்கு எச்சரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.இதே வேளை முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கி யுள்ள பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடுவதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை முஸ்லிம் அமைச்சர்கள் நேற்று சனிக்கிழமை பதுளையில் சந்தித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.
முஸ்லிம் மக்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் எடுக்கத் தவறினால் இலங்கைக்கான வீசா நடைமுறைகளை கடுமையாக்க நேரிடலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷ், ஈராக், ஈரான், மலேஷியா, கட்டார், இந்தோனேஷியா, குவைட், மாலைதீவு, பாலஸ்தீனம், பாகிஸ்தான், நைஜீரியா, துருக்கி, சவூதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகள் இவ்வாறு 11 பக்கம் பார்க்க...



## அண்மைய இன வன்முறைகளை கண்டித்து லண்டனில் ஆர்ப்பாட்டம்

(லண்டன்)
அளுத்கம மற்றும் பேருவளை நகரங்களில் அண்மையில் ஏற்பட்ட இன ரீதியான வன்முறைகளைக் கண்டித்து சம உரிமை இயக்கம் நேற்று லண்டனில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியது. லண்டனில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்திற்கு எதிரில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.
கடந்த காலம் முழுதுவம் படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்த இந்த துரதிஷ்டவசமான இனவாத 11 பக்கம் பார்க்க...



## முஸ்லீம்களுக்கு எதிரான தாக்குதல் இந்திய அரசு தலையிடவேண்டும்

ஈழத்தமிழர்கள் இன அழிப்பைத் தொடர்ந்து, இப்போது தமிழ் முஸ்லீம்களை குறிவைத்து இனவெறித் தாக்குதல்களை தீவிரப் படுத்தியுள்ளது சிங்கள பௌத்தப் பேரினவாதம்.
அண்மைக்காலமாக இலங்கைத் தீவில் தெற்கில் வாழும் கிறிஸ்தவர்களையும், முஸ்லீம்களையும் சிங்கள புத்த வெறியர்கள் திட்டமிட்ட வகையில் தாக்கி வருகின்றனர். இச் சிறுபான்மை மக்களுடைய வீடுகள், வணிக நிறுவனங்கள், வழிபாட்டு இடங்கள் ஆகியவை தொடர்த் தாக்குதலுக்கும், சூறையாடலுக்கும் உள்ளாகி வருகின்றன.
குறிப்பாக சூன் 15 தொடங்கி அலுத்துகமா, பெருவலா, தர்காடவுன் போன்ற இடங்களில் இசுலாமியருக்கு எதிரான தாக்குதல்கள் ஓர் இனத் துடைப்பு நடவடிக்கையாக உச்சம் பெற்றுள்ளது பொத்து பல சேனா என்ற சிங்கள புத்த வெறி அமைப்பு 11 பக்கம் பார்க்க...

## தருப் பெயர்ச்சியைத் தொடர்ந்து மாலைதீவுக்கு செல்லும் மஹிந்த

(கொழும்பு)
ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் புதன் கிழமை மாலைதீவுக்கு செல்ல தீர்மானித்துள்ளார்.
ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இரண்டு நாட்கள் மாலைதீவில் தங்கியிருப்பார் என மாலைதீவின் இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதியின் மாலைதீவு பயணத்திற்காக நோக்கம் மற்றும் காரணம் என்ன என்பது தெளிவாக வெளியிடப்படவில்லை.
11 பக்கம் பார்க்க...

## மீண்டும் ஒரு கறுப்பு ஜூலையை ஏற்படுத்த வேண்டிய அவசியமில்லை

நாட்டை அழிப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை அரசாங்கம் உடனடியாக கட்டுப்படுத்த வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.
முப்பது வருடமாக நாட்டில் நிலவிய பயங்கரவாதத்தை தோற்கடித்த அரசாங்கமே தற்போது ஆட்சி செய்வதாக சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.
இந்த அரசாங்கம் நாட்டின் தற்போதைய நிலையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர வேண்டும் என அவர் கூறினார்.
அரசாங்கம் என்ற ரீதியில் இந்த 11 பக்கம் பார்க்க...

## அவுஸ்திரேலியாவில் அகதி விசா கோரல; உயர் நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு

அவுஸ்திரேலியாவில் அகதிகளின் விசா தொடர்பாக, வ்ழக்கறிஞர் டேவிட் மேன் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு நேற்று வெற்றி பெற்றுள்ளது.

படகுகளிலோ அல்லது வேற எந்த சட்டவிரோதமான முறையிலோ அவுஸ்திரேலியாவுக்குள் பிரவேசிதவர்களுக்கு அகதி அந்தஸ்து வழங்கப்பட்ட பின், 90 நாட்களுக்குள் பாதுகாப்பு வீசா வழங் கப்படவேண்டுமென்ற கால எல்லை அவுஸ்திரேலியா அரசாங்கத்தினால் விதிப்பட்டிருந்தது .

இந்த கால எல்லையை நீக்கும்படி அவுஸ்ரேலியா உயர் நீதி மன்றம் அரசாங்கத்துக்கு ஆணை பிறப்பித்துள்ளது.

குடிவரவு அமைச்சர் அகதி அந்தஸ்து கோரி விண்ணப்பிபவர்களின் விண்ண 11 பக்கம் பார்க்க...

## எங்களை இனவாதி என்றே வைத்துக் கொள்ளுங்கள்



(கொழும்பு)
தென்னிலங்கையில் அளுத்கம பிரதேசத்தில் கடந்த ஞாயிறன்று வெடித்த முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளைத் தூண்டியதாக பௌத்த கடும் போக்கு அமைப்பான பொது பல சேனா மீது ஆளும்கட்சி எதிர்க்கட்சி அரசியல் தலைவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.
அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் 11 பக்கம் பார்க்க...

## வன்முறைகளை விசாரிக்க உயர்நிலைக் குழு

அண்மைய ச்ம்பவங்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு உயர்நிலைக் குழுவொன்றை நியமிக்கவுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.
அளுத்கம, பேருவளை பிரதேசத்தில் இடம்பெற்ற மோதல் மற்றும் நாட்டின் பல பகுதிகளிலும் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் குறித்து ஆராய்வதற்கே இவ் விசேட குழு நியமிக்கப்படவுள்ளது. இவ்வாரம் அளுத்கம, பேருவளை பிரதேசத்தில் 11 பக்கம் பார்க்க...

24X7 மணிநேர முதன்மை செய்திகளுடன்..
www.putheyavan.com http://www.
அரசியல்,சினிமா,அழகு,திரைவிமர்சனம்,விநோதம் போன்ற சுவையான அம்சங்களுடன்.
உள்ளதை உள்ளபடி....
உண்மைகள் ஒருபோதும் உறங்குவதில்லை........
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வ மத.தலைவர்களின் கலந்துரையாடல்-மன்னாரில்

மன்னார் மாவட்டத்தில் இயங்கி வரும் சர்வமத பேரவையானது தனது செயற்பாடடின் ஒரு முன்னெடுப்பாக மதத்தலைவர்களை ஒன்று கூட்டி அவர்கள் மத்தியில் திறந்த கலந்துரையாடல் நிகழ்வினை நடாத்தி உள்ளது. இக் கலந்துரையாடலின் முக்கியத்துவத்தையும அதன் விளைவு களையும் மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கும், சமீபநாட்களாக தென் பகுதி அளுத்கம,பேருவளை,தர்கா நகர் உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தொடர்ச்சியாக பௌத்த பேரின வாதிகளால் நடாத்தப்பட்டடு வரும் இன அழிப்பு ,சொத்தழிப்பு,உயிரிழப்பு என்பவற றிற்கொதிரான கவனயீர்ப்பு போராட்டத்தை எதிர் வரும் 25ம்திகதி மன்னார் பொதுவிளையாட்டரங்கில் நடாத்த முடிவு செய்யப்படடுள்ளது

# மது போதையில் பிக்கப் சவாரி மின்கம்பத்தில் மோதி விபத்து





யாழ்.மாநகர சபையின் ஆணையாளர் பிரணவநாதன் அவர்களின் பிக்கப் வாகனம் வேலணை அராலிச் சந்தியில நேற்று முன் தினம் மாலை 3 மணியளவில் விபத்துக்குள்ளானது.

மேற்ாடி வாகனத்தில் அலுவலக நேரத்தில் சாட்டிக் கடற்கரையில் மது அருந்தி விட்டு நிலை தடுமாறிய போதையில் வாகனத்தை செலுத்தி யதிலேயே இவ் விபத்து ஏற்பட்டுள்ளது.

வேலணை அராலிச் சந்தியில் உள்ள மின் கம்பம் ஒன்றில் மோதியதில் மின்கம்பம் ஐந்தடி தூரம் வரை தூக்கி வைக்கப்பட்டுள்ளது.

வாகனத்தின் முன்பக்கம் கடுமையாகச் சேதமடைந்துள்ளது. யுன்.என்.டி.பி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட யாழ்.மாநகர சபை ஆணையாளரின் வாகனமே இவ்வாறு விபத்துக் குள்ளாகியது.

அத்துடன், வேலணை வங்களாவடிச் சந்தியில் பலரின் உயிரைப் பறித்தெடுக்கும் வகையில் மேற்படி வாகனம் வேகக் கட்டுப்பாட்டையிழந்து சென்றதாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

இவ் வாகனத்தில் யாழ்.மாநரக சபையில் கடமையாற்றும் ஐந்து உத்தியோகத்தர்கள் அதிஉச்ச மதுபோதையில் இருந்துள்ளனர்.

வாகனச் சாரதி நிலை தடுமாறி வாகனம் விபத்துக்குள்ளானது கூடத் தெரியாத நிலையில் போதையில் நின்றுள்ளார். -

ஒரு அரச வாகனத்தில், அதுவும் ஐந்து பேரும் அரச பணியாளர்கள், அலுவலக நேரத்தில் இவ்வாறானதொரு செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளமை யாழ்.மாநகர சபையின் நிர்வாகத் திறமையினை எடுத்தக் காட்டுவதாக அமைந்துள்ளது.

அத்துடன், வாகனச் சாரதி விபத்து நடந்த இடத்தில் கூடிய மக்களிடம் தகாத வார்த்தைப் பிரயோகத்தை மேற்கொண்டதுடன், இது எங்களது வாகனம், இதை நீங்கள் ஒன்றும் பார்க்த் தேவையில்லை என போதையில் கூறியுள்ளார்..

இது இவ்வாறிருக்க வாகனத்தின் முன் வைக்கப்பட்டிருந்த ஆணையாளரின் பெயர் பலகை வாகனத்தில் வந்த ஒருவரால் இரகசியமான முறையில் மறைத்து வைக்கப்பட்டுள்ளது

# சிறுபான்மையினருக்கு எதிரான தாக்குதலுக்கு யாழ்.பல்கலை மாணவர் ஒன்றியம் கண்டனம்

அரசியல் சார்புகளுக்கு அப்பா ற்பட்டதே கல்விச்சாலை எனவே மாணவர்களது கற்றலுக்கு இடையூறாக அமையும் செயற்பாடுகளை கண்டிப்பதாக யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

தென்னிலங்கையில் முஸ்லிம் மக்கள் மீதான தொடர் தாக்குதல் சம்பவத்திற்குக் கண்டனம் தெரிவித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகத்தினால் அமைதி வழியிலான கண்டனப் போராட்டம் ஒன்று நேற்று முன் தினம் நடத்தப்பட்டது.

இந்நிலையில் இப் போராட்டத்தின் எதிரொலியாக பல்கலைக்கழக வளாகத்தினுள் உள்ள முஸ்லிம் தொழுகை அறையின் மீது இனம்தெரியாத நபர்களினால் நேற்று காலை கழிவொயில் தாக்குதல் இடம்பெற்றுள்ளமையைக் கண்டித்து யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கை யிலேயே இவ்வாறு தெரிவிக்க ப்பட்டுள்ளது.

மேலும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவதுதாவது,

இலங்கையின் சுதந்திரத்தின் தமிழ் சிறுபான்மை இனத்தின் மீதான பேரினவாதத்தின் அடக்கு முறைகள் முள்ளிவாய்க்காலோடு முக்கால்வாசி முடங்கிப்போயுள்ள நிலையில் மீண்டும் தனது கோரப்பிடியினை மதவாதம் என்ற பெயரில் இன்னுமொரு சிறுபான்மை இனத்தின் மீது திணிக்கத் தொடங்கிவிட்டது என்பதையே தென்னிலங்கையில் முஸ்லிம் மக்கள் மீதான தாக்குதல்கள் குறிக்கின்றன.

நேற்று காலை நடந்த இச்சவம்பவம் எமது கண்டனப் போராட்டத்திற்குப் பதிலடியாகவே நடத்தப்பட்டதென்பது தெட்டத்தெளிவாகத் தெரிகின்றது.

இதுவும் மதவாதம் சார்ந்த ஒரு தாக்குதல் சம்பவமே. இந்த அநாகரிகமான சம்பவத்தை நாங்கள் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

மாணவர்களது தடையின்றிய கற்றல் செயற்பாடுகளிற்கு இடையூறாக அமையும் இதுபோன்ற அநாகரிகமான செயல்கள் நாகரிகமுள்ள கல்விப் புலத்தில் ஏற்றுக்கொள்ளமுடியாத ஒன்றாகும்.

ஆகவே இந்தச் சம்பவத்தினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரான நாம் மிகவும் வன்மையாகக் கண்டிப்பதோடு சிறுபான்மை இனத்தினர் மீதான அசம்பாவிதங்களுக்கு எதிராக நாம் தொடர்ந்தும் குரல் கொடுப்போம் என்பதனையும் கூறிக்கொள்கின்றோம் என அவ் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# தலைமன்னார் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 22 இந்திய மீனவர்களையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவு




இலங்கை கடற்பரப்பினுள் கடந்த புதன் கிழமை(18) அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட 22 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் பதில் நீதவான் இ.கயஸ் பல்டானோ நேற்று வெள்ளிக்கிழமை உத்தரவிட்டார்.

-கடந்த புதன் கிழமை இரவு 5 படகுகளில் வருகை தந்து இலங்கை கடற்பரப்பில் மீன் பிடியில் ஈடுபட்ட 22 ,இந்திய மீனவர்களை கடற்படையினர் கைது செய்து விசாரனைகளின் பின் கடந்த வியாழக்கிழமை மாலை மன்னார் கடற்தொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

-கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் விசாரனைகளின் பின் குறித்த 22 இந்திய மீனவர்களையும் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை காலை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தியதோடு மீனவர்களின் படகுகளில் இருந்த வலைத தொகுதிகளையும் மன்றில் ஒப்படைத்தனர்.

இதன் போது விசாரனைகளை மேற்கொண்ட மன்னார் மாவட்ட பதில் நீதவான் இ.கயஸ் பல்டானோ குறித்த மீனவர்களை இம்மாதம் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டதோடு மீனவர்களின் படகுகள் மற்றும் வலைத்தொகுதிகளை பாதுகாக்க உரிய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

# கரவெட்டியில் மாணவன் தூக்கில் தொங்கி மரணம் வடக்கு மாகாண முதலமைச்சரே பொறுப்பு



கரவெட்டிப் பகுதயில் 16 வயது மாணவன் தூக்கில் தொங்கி மரணமாகியுள்ளான். இதற்கு வடக்கு மாகாண முதலமைச்சரே பொறுப்புக் கூறவேண்டும்.

மிகுந்த வறுமை காரணமாகவே மாணவன் தூக்கில் தொங்கியுள்ளதாகத் தெரியவருகின்றது. தாயும் தந்தையும் முன்னாள் போராளிகளாக இருந்து புனர்வாழ்வு பெற்றவர்களாவர்.

இந் நிலையில் கூட்டமைப்பின் உத்தரவுக்கு இணங்க தந்தை இலங்கை அரசிற்கு எதிராக சுவரொட்டி ஒட்டியதன் பேரில் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனால் குறித்த மாணவனின் குடும்பம் எந்தவித உதவியும் இன்றி மிகுந்த துன்பத்தில் இருந்ததாகத் தெரியவருகின்றது. இதன் காரணமாகலே மாணவன் தூக்கில் தொங்கியுள்ளதாகத் தெரியவருகின்றது.

கரவெட்டி இராஜகிராமம் பகுதியைச் சேர்ந்த கருணாகரன் நிம்சன்(வயது 16)எனும் கரவெட்டி ஞானசாசிரியார் கல்லூரி மாணவனே தற்கொலை செய்து கொண்டுள்ளான்.

வடக்கு மாகாணசபை தேர்தலில் தமிழர்களுக்கு விடிவு ஏற்படுத்தப் போகின்றோம் என வீராப்புப் பேசிய தமிழ்த்தேசியக்கூட்டமைப்பும் வடக்கு மாகாண முதலமைச்சருமே இந்த தற்கொலைக்குப் பொறுப்புக் கூறவேண்டியவராவர்.

முன்னாள் போராளிகளின் நலன்களுக்காக எந்தவொரு திட்டடத்தையும் வைத்திருக்காது அவர்களை வைத்து வாக்கு கேட்டு பதவிக்கு வரும் இவ்வாறானவர்களை மக்கள் அறிந்து செயற்படல் வேண்டும்.

# இராணுவ வீரரின் குற்றம் நிரூபிக்கப்பட்டால் பணியில் இருந்து நீக்கப்படுவார்: இராணுவத் தளபதி

மூளை வளர்ச்சி குறைந்த சிறுமியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பாட்ட இராணுவ வீரர் சம்பந்தமாக, உடனடியாக விசாரணைகளை ஆரம்பிக்குமாறு இராணுவத் தளபதி லெப்டினட் ஜெனரல் தயா ரத்நாயக்க ஆலோசனை வழங்கியுள்ளார்.

இராணுவ பொலிஸாருக்கே அவர் இந்த ஆலோசனையை வழங்கியுள்ளார்.

விசாரணைகளில் இராணுவ வீரர் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால் அவர் பணியில் இருந்து நீக்கப்படுவார் எனவும் இராணுவம் தெரிவித்துள்ளது.

மூளை வளர்ச்சி குன்றிய 15 வயது பாடசாலை மாணவியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாக கூறப்படும் இராணுவத்தின் பொறியியல் படைப் பிரிவின் வீரர் ஒருவர், இன்று அதிகாலை கைது செய்யப்பட்டதாக முந்தல் பொலிஸார் தெரிவித்திருந்தனர்

# ஆறாயிரம் முஸ்லிம்கள் இடம்பெயர்வு என்பது பொய் பிரச்சாரம்

**ஜாதிக ஹெல உறுமய வாதம்**

அளுத்கம மற்றும் பேருவளை பகுதிகளில் 6 ஆயிரம் முஸ்லிம் மக்கள் அகதிகளாகி இருப்பதாக உலக முழுவதும் முன்னெடுக்கப்பட்டு வரும் பிரசாரத்தில் உண்மையில்லை என ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அகதிகளாகி இருப்பதாக கூறப்படும் மக்கள் இரவு நேரத்தில் பள்ளிவாசல்களில் வந்து தங்குகின்றனர்.அவர்கள் அகதிகளாக இடம்பெயரவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜாதிக ஹெல உறுமய என்ன கூறினாலும் பௌத்த பயங்கரவாதிகளின் தாக்குதல்களுக்கு அஞ்சி 6 ஆயிரத்திற்கும் மேற்பட்ட முஸ்லிம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாகவே தெரியவருகிறது.

இவர்களில் அளுத்கம மற்றும் பேருவளை பிரதேசத்தை சேர்ந்தவரகளும் நாட்டின் ஏனைய பல பிரதேசங்களை சேர்ந்தவர்களும் அடங்குகின்றனர்.

சிங்கள பௌத்த பயங்கரவாதிகளின் தாக்குதல்களுக்கு அஞ்சி , வியாபாரம், தொழில் மற்றும் நாளாந்த தொழில்களில் ஈடுபட்டு வந்த பெரும்பாலான முஸ்லிம்கள் தமது சொந்த ஊர்களுக்கு திரும்பிச் சென்றுள்ளனர்.குறிப்பாக இலங்கையில் சிறிய வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள முஸ்லிம்களில் பெரும்பாலான முஸ்லிம்கள் காத்தான்குடி பிரதேசத்தை சேர்ந்த வர்கள்.அங்கிருந்து கிடைக்கும் தகவல் களுக்கு அமைய தம்புள்ளை, குருணாகல், . கண்டி, மாத்தறை போன்ற பிரதேசங்களில் சிறு வியாபாரங்கள் மற்றும் தொழில்களில் ஈடுபட்டு வந்த முஸ்லிம்கள் காத்தான்குடி திரும்பியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதியவன்
පුදියවත් PUTHEYAVAN
ஊருக்கு நல்லது சொல்வேன்-உண்மை அறிந்து சொல்வேன்
இல:-87 பிரதான வீதி, மன்னார்.
தொலைபேசி இல. 0233238444
Email:putheyavannews@gmail.com

## தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு

தமிழ் மக்கள் முப்பது ஆண்டிற்கு மேற்பட்ட யுத்தத்தினால் இழக்கமுடியாத அளவிற்கு எல்லா வற்றையும் இழந்து விட்டனர் அதனால் எல்லாம் இழந்தவன் எதற்கும் அஞ்ச மாட்டான் எனும் மன நிலையே தழிழர் மத்தியில் குறிப்பாக இறுதியுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் மனப் போக்காகக் காணப்படுகின்றது

இந்த மனநிலை தற்செயலாக ஏட்பட்டதில்லை நீண்ட பாதிப்பு மறக்க முடியாத வடுக்களையும் துன்ப துயரங்களையும் வாழ்வியலில் வழி நெடுக சுமந்து வாழ்ந்து வரும் நிலையே காணப்படுகின்றது

தமிழர்கள் சுயநிர்ணய தத்துவத்தின் அடிப்படையில் எங்களை நாங்களே ஆளும் நிலை ஏற்படுத்த எமது தாயகப் பிரதேசத்தில் சுதந்திரமாக வாழவும் வழி கோரியே நீண்ட போராட்டத்தை நடாத்தினோம் அகிம்சையிலும் ஆயுதத்திலும்

எல்லாமே எட்டாக்கனியாகவே முடிந்து விட்டது 2009ற்குப் பின்னர் பொறுப்போடும் நிதானத்துடனும் வழிநடாத்துவதுக்கும் தகுந்த தலைமை த்துவத்தின் இடைவெளி தொடர்ந்த வண்ணமே உள்ளது

எனவே இந்த இடை வெளியை நிரப்புவது யார்? எனும் கேள்வி தற்போதைய வெறுமை நிலையில் எழுவது ஒன்றும் ஆச்சரியமில்லை எனவே கடந்த தேர்தலில் மிக அதிகமானவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வாக் கழித்தார்கள் பெரும் பான்மை பலமும் கிட்டியது ஆனால் ஒன்பது மாதமும் கடந்துவிட்டது நடந்தது என்ன?

என மக்கள் கேள்வி எழுப்புகிறார்கள் மாகாணசபை மூலம் ஏதும் செய்ய முடியாது என்பது மாகாணசபை உறுப்பினர்களைவிட மக்களுக்கு தெளிவு அதிகம் ஆனால் தமிழர்கள் எதிர்பார்ப்பது அழிந்து போன தேசத்தை மீட்க முடியாது உடைந்து போன மனதிற்கு ஒத்தடம் கொடுக்க வேண்டிய பணியையாவது செய்ய முடியாதா ?

ஒன்பது மாதம் கடந்து ஒரு அழிவடைந்த தேசத்தின் முதலமைச்சர் பலமுறை தீர்மானத்திற்கு மேல் தீர்மானம் கொண்டுவந்த பின்னர் முல்லைத்தீவுக்கு சென்றிருக்கிறார் இவ்வளவு காலமும் என்ன செய்தார்கள் ?

குறைந்த பச்சம் வடக்கில் உள்ள ஐந்து மாவட்டத்திற்கும் மாதத்தில் ஒரு முறை முதலமைச்சர் அமைச்சர்கள் விஜயம் செய்து அந்த மக்களின் நிலவரத்தை கண்டறிந்து கொள்ள வேண்டும் மக்களினுடைய எதிர்பார்ப்பும் அது தான் இதற்குத்தான் வாக்களித்தவர்கள் பணத்துக்காவோ வேறு எதையும் அவர்கள் எதிர் பாாத்தவர்கள் அல்ல இதைச் செய்வது கடினமான விடயமல்ல

விடுதலைக்காக பல ஆண்டுகளாக போராடுகின்ற ஒரு இனத்தின் நிர்வாகத்தை பொறுப் பேற்றவர்கள் அதற்குரிய தார்மீக நிலையில் செயலாற்ற வேண்டியது தமிழ் தேசியத்திற்குச் செய்ய வேண்டிய பணியாகும் வேறுமனே பதவிகளை அனுபவிப்பது அல்ல இனவிடுதலைப் போராட்டம் பாவம் தமிழ் மக்கள் எத்தனை பெயரால் ஏமாற்றப்பட்டு வாழும் நிலை காணப்படுகின்றது எனவே தமது இருப்பு நிலை அரசியல் போக்குக் கடந்து இனமான உணர்வில் சிந்திப்பார்களா இல்லையேல் தொடர்ந்து மக்களை ஏமாற்ற முடியாது.




## (லயன் பொடியன்)

தென்னிலங்கை முஸ்லீம் உறவுகள் மீதான தாக்குதல்களை கண்டித்து தமிழ் தரப்புக்களும் களம் இறங்கியிருக்குது.நல்லதொரு திருப்பம்.தமிழ்-முஸ்லீம் உறவு காலத்தின் தேவை.யாழ்.பல்கலைக்கழக மாணவ சமூகமும் கடந்த கால மனக்கசப்பை மறந்து போராட்டத்தை நடத்தியிருக்குது.அதில தமிழ் தேசிய மக்கள் முன்னணிகாரரும் கூட்டமைப்புகாரரும இணங்கி ஆர்பபாட்டமொன்றை நடத்தியிருக்கினம்.எல்லாமுமே நம்பிக்கையினை தருகுது.ஆனால் அதில பேசிய வடமாகாண உறுப்பினர் ஒருத்தர் அழுத்கமவில பிரபாகரனை ஒரு தாய் தேடியதாக அவிழ்த்து விட்ட பேச்சு எங்கட ஊடக பரப்பில பரபரப்பாக வெளிவந்திருக்குது.ஆனால் உந்த தம்பியும் முள்ளிவாய்க்காலில செத்துப்போனதுகளிற்கு வடமாகாணபேரவையில ஒரு விளக்கேத்தி அஞ்சலிக்காமல் தடுத்து சதி செய்த ஆட்களுள் ஒருத்தரெண்டு கேள்விபட்டு மனசு நொந்து போச்சுது. நினைவேந்தலை சிவாஜிலிங்கம் நடத்த வாகன கராஜினுள் பதுங்கி நிண்ட தலையளிற்கு புறோக்கராக செயற்பட்டதாக பேப்பர்காரர் சொல்லுறாங்கள்.எது உண்மையெண்டது அவை அவையளுக்கு தானே தெரியும்.அதில ஆயிரம் பிரச்சினை கிடக்க மூச்சுவிடாத பேரவை தலைவரும் போராட்டத்திற்கு ஆதரவெண்டு விட்டாரே அறிக்கையொன்று புல்லரிச்சுப்போட்டுது பாருங்கோ.

வடமராட்சியின் கரவெட்டிப்பகுதியில் முன்னாள் போராளி குடும்பமொன்றினுடைய 16 வயது குருத்தொன்று வறுமையில தற்கொலை செய்த கதை எத்தனை பேருக்கு தெரியும்.அதில ஊர் சனம் திரண்டு இறுதிக்கிரியை நடத்தியிருக்கு.அந்த பக்கம் எட்டிப்பார்த்த அரசியல்வாதியெண்டால் வடமாகாணசபை உறுப்பினர் சுகிர்தன் மட்டுமாம்.அந்தப்பகுதி கூட்டமைப்பின்ர உள்ளூராட்சி தலைவர் தனக்கு அந்த பகுதி சனம் வாக்களிக்கிறதில்லையெண்டு வரயில்லையாம்.புகைப்படக்கலைஞர்களோட திரியிற வடமாகாண அமைச்சர்மாரோ, எம்பிமாரோ அந்தப்பக்கம் எட்டிக்கூட பார்த்திருக்கவில்லையாம். உயிரோ இருக்கிறதுகளிற்கு உதவுங்கோ.பிறகு செத்தாப்பிறகு கருமாதி செய்யிற வேலைக்கு ஆட்கள் தேவையில்லை பாருங்கோ.அதிலயும் அந்த பொடியனின் தகப்பன் புனர்வாழ்வில ,ருந்து விடுபட்டாப்பிறகு மாவீரர் தினத்திற்கு சுவரொட்டி ஒட்டினதாக கூறி கைதாகி மீண்டும் புனர்வாழ்விற்கு அனுப்பபட்டிருக்கிறாரெண்டது கொசுறு தகவல்.

முஸ்லீம்கள் மீதான தாக்குதல் தொடர்பில சீற்றமடைஞ்சதால தான் ஒரு சில முஸ்லீம் அமைச்சர்மாருக்கு மானம் ரோசம் இருக்கெண்டது வெளியுலகிற்கு தெரியுது.அப்பிடியிருந்தும் இப்பவும் ராசாவுக்கு தர்ம சங்கடம் தரக்கூடாதெண்டும் அமெரிக்க சதியெண்டும் வக்காலத்து வாங்க ஒரு பகுதி விசுவாசத்தோட அலையுது.ஆனால் ஒன்றை மட்டும் புரிஞ்சுகொள்ளவேணும்.முஸ்லீம் இளம் சமூகம் இப்போதிருக்கிற அரசியல் தலைமைகளை நம்பாது பிரிஞ்சு போறது அப்பட்டமாக தெரியுது.எதிர்வரும் காலம் அரசியல்வாதிகளிற்கு மகிழ்ச்சியாக இருக்காது.அதிலயும் யாழ்.பல்கலையில மாணவர்களது தொழுகை மண்டபத்தினுள் கழிவு ஒயில் வீசின போதும் தொழுகையில அவர்கள் காட்டிய வீறாப்பு அவர்களது உணர்வுகள் பல செய்திகளை சொல்லியிருக்குது.

இரணைமடுக்குள குடிநீர் விநியோகத்திட்டம் கைவிட்டுப்போகப்போறது உறுதியாயிட்டுது. திட்டத்தில பங்கெடுத்திருந்த பிரான்ஸ் நிறுவனம் தனது உதவியை விலக்கிக்கொண்டிருக்குது.மாற்று திட்டமெண்டு வடக்கு விவசாய அமைச்சர் முழத்துக்கு மூன்று தரம் கூறினாலும் அவையளிட்ட தெளிவான மாற்றுத்திட்டமில்லையெண்டது தான் உண்மை பாருங்கோ.அதில திட்டத்தை அமுல்படுத்த கோரி டக்ளஸோட கூடிப்போய் கொழும்பில அரச அமைச்சரை சந்திச்சவர்களுக்குள்ள தமிழரசு பிரமுகர் பேராசிரியர் சிவச்சந்திரனும் இருக்கிறார்.இரணைமடு விவகாரம் தொடர்பான அறிவிப்புக்கள் தமிழ் தேசியக்கூட்டமைப்பினதோ தமிழரசுக்கட்சியினதோ இல்லையெண்டு அந்த ஆள் உறுதியாக கூறுகின்றது.அந்த ,ரண்டு பேர் பற்றியே அந்த ஆள் கூறுகின்றது. சரி மாற்று திட்டம் பற்றி கதைக்கிறவை குளத்தை ஆளமாக்க அல்லது உயர்த்த நிதி பெற என்ன செய்திருக்கினம். யாழ்ப்பாணத்திற்கு எந்த வகையினில் குடிநீர் வழங்குறதெண்டவற்றை தெளிவுபடுத்தினால் நல்லது பாருங்கோ.

மணலாறில பறிபோகின்ற தமிழர் தாயகத்தின்ர நிலை பற்றி ஓரளவிற்கேனும் வடமாகாண உறுப்பினர் ரவிகரன் மூலமே அம்பலமாகின்றது.ஆனால் முல்லைதீவில கூட்டமைப்பு சார்பில நாலு மாகாணசபை உறுப்பினர்கள் இருக்கினம் .அதைவிட வன்னி மாவட்ட நீடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கினம்.ஆனால் அவையளில பலர் எங்கே இருக்கினம் என்ன செய்கினமெண்டு புரியவில்லை.ஆகக்குறைந்தது மக்களை திரட்டி அடையாளப்போராட்டங்களை கூட அவையளால நடத்த முடியவில்லை.அதுக்கும் யாழ்ப்பாணத்தில இருந்து தான் ஆட்களை தருவிக்க வேண்டியிருக்கு.நில சுவீகரிப்பு அரசியல் ஸ்திரமின்மையெண்டு முல்லைதீவு கனக்க பிரச்சினைகளோட இருக்கேக்கை இருக்கிற ஆட்கள் விழிப்பாக இருக்கோணும் பாருங்கோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளுத்கம வன்செயல் குறித்து சபையில் விபரித்த மு.கா. எம்பி



(கொழும்பு)
அளுத்கம வன்செயல் காரணமாக 8பேர் பலி, 170 பேர் காயம், 580 கோடி பெறுமதியான சொத்து இழப்பு, 150 வீடுகள் அழிப்பு, 2450 பேர் இடம்பெயர்வு, 17 பள்ளிவாசல்கள் மீது தாக்குதல், 1000 பேர் தொழில் வாய்ப்பு இழப்பு, 272 கால்நடைகள் கொலை, 86 கொள்ளைச் சம்பவங்கள். இவ்வாறு நேற்று பாராளுமன்றத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி.யான மொஹமட் அஸ்லம் தகவல் வெளியிட்டார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் தகவல் வெளியிட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி.யான மொஹமட் அஸ்லம் மேற்படி சம்பவத்தை தாம் வன்மையாக கண்டிப்பதாகவும் ஏற்பட்டுள்ள அழிவுகளுக்கும் இழப்புகளுக்கும் அரசாங்கம் நட்ட ஈட்டினை வழங்க வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று 2013 ஆண்டுக்கான நிதி திட்டமிடல் அமைச்சின் அறிக்கை தொடர்பிலான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்ட தகவல்களையும் கண்டனத்தையும் வெளியிட்டார். அஸ்லம் எம்.பி.இங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

அளுத்கமையில் இடம்பெற்ற அசாம்பாவித சம்பவம் தொடர்பில் நாம் எமது கவலையை தெரிவித்துக் கொள்கின்றோம். இந்த சம்பவமானது கண்டனத்துக்கு உரியதாகும். சமாதானத்தை பாதுகாக்கும் பொலிஸார் உரிய வகையில் சட்டத்தை நடைமுறைப்படுத்தியிருந்தார்களேயானால் இத்தகைய அழிவுகளும் இழப்புக்களும் ஏற்படாத வண்ணம் பாதுகாத்திருக்க முடியும். ஆனால் அங்கு அவ்வாறு இடம்பெறவில்லை.

இச் சம்பவத்தில் தமிழர் ஒருவர் உட்பட நான்கு பேர் படுகொலை செய்யப்பட்ட அதேவேளை மேலும் நான்கு பேர் சம்பவம் தொடர்பான அதிர்ச்சியால் மாரடைத்து மரணமாகினர். இதன்படி இந்த சம்ப வத்தில் எட்டு பேர் உயிரிழந்திருக்கின்றனர். அது மாத்திரமல்லாது 170 பேர் காயமடைந்துள்ளனர்.

150 வீடுகள், கடைகள் மற்றும் 17 பள்ளிவாசல்கள் தாக்கி அழிக்கப்பட்டுள்ள்ன.

370 குடும்பங்களை சேர்ந்த 2450 பேர் இடம்பெயர்ந்து அகதிகளாகியுள்ளனர். அத்துடன் இந்த சம்பவத்தால் 580 கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களுக்கு அழிவு ஏற்பட்டுள்ளது. இங்குள்ள வர்த்தக நிலையங்கள் அழிவுக்குள்ளாக்கப்பட்டுள்ளதால் சுமார் ஆயிரம் பேர் வரையிலானோர் தொழில் வாய்ப்புகளை இழந்திருக்கின்றனர்.

பாடசாலை மாணவர்கள் தமது அனைத்து உடைமைகளையும் அது மாத்திரமன்றி 272 கால்நடைகள் கொல்லப்பட்டுள்ளதுடன் இங்கு 86 கொள்ளைச் சம்பங்களும் நடந்தேரியுள்ளன.

தர்கா நகரை கொண்டுள்ள நான் அங்குள்ள சிங்கள மக்களை நன்கு அறிவேன். அவர்களுடன் முஸ்லிம்கள் சகஜமாகவே வாழ்ந்து வருகின்றனர். எனினும் சம்பவம் தினத்தன்று புறபகுதிகளில் இருந்து வந்தவர்களாலேயே இந்த அசாம்பாவித சம்பவங்கள் நடத்தப்பட்டுள்ளன.

ஆகவே இதனை நாம் மிகவும் வன்மையாக கண்டிக்கின்றோம். அத்துடன் இவ்விடயம் தொடர்பில் அரசாங்கம் உரிய வகையிலான நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். மேலும் எமது பிரதேசத்துக்கு ஜனாதிபதி நேரடியாக வருகை தந்து அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்தமை தொடர்பில் எமது மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு சமாதான சூழல் ஒன்று உருவாக்கப்பட்டிருக்கின்ற நிலையில் நடந்தேறியுள்ள சம்பவமானது மீண்டும் பழைய நிலைக்கு இழுத்துச் செல்லும் ஒரு செயற்பாடாகவே அமைந்திருக்கின்றது.

இவ்வாறான விடயங்களுக்கு இடமளிக்கக் கூடாது. இச்சம்பவத்தின் காரணரான பொதுபலசேனாவே பொதுச் செயலாளரை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்பதுடன் இவ்வாறான சம்பவங்களுக்குள் முடிவுக்கட்டப்பட வேண்டும் என்றும் இந்த இடத்திலே கோரிக்கை வைக்கின்றேன். ஏனெனில் முஸ்லிம்களாகிய நாங்கள் பாகிஸ்தானில் பிறக்கவில்லை. ஆப்கானிஸ்தான் எம்மை ஏற்றுக் கொள்ளப் போவதுமில்லை. நாம் இலங்கையர் என்று கூறி கொள்வூதில் பெருமை அடைகின்றோம்.

அதுமாத்திரமன்றி சிங்களவர்களில் பெரும்பான்மையானோர் இவ்வாறான குறுகிய சிந்தனையை கொண்டிருக்கவும் இல்லை. தாக்குதலை நடத்தவும் இல்லை. ஆனால் சிங்களவர்களில் மிக சிறுதொகையினரே இப்படி செயற்படுகின்றனர்.

சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பாதுகாப்பு தரப்பினரே அளுத்கமை தாக்குதலுக்கு ஒத்துழைப்பையும் வழங்கியிருந்தனர். ஆகவே இது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

# சட்டவிரோத ஆட்கடத்தல் நடைபெறும் நாடுகளின் வரிசையில் இலங்கை

(கொழும்பு)
சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகள் இடம்பெறும் நாடுகளின் இரண்டாம் பிரிவிற்குள் இலங்கை உள்ளடக்கப்பட்டுள்ளது. சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த தவறிய நாடுகளின் வரிசையிலேயே இலங்கையின் பெயர் உள்ளடக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத ஆட்கடத்தல்களில் ஈடுபடுவோர் கண்டுபிடிக்கப்பட்டு அவர்களுக்கு எதிராக விசாரணை நடத்தி தண்டிக்க இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அமெரிக்கா கோரியுள்ளது. சட்டவிரோத ஆட்கடத்தல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும் என தெரிவிக்கபட்டுள்ளது. சட்டவிரோத ஆட்கடத்தல்களினால் பாதிக்கப்படுவோர் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு இலக்காவதாகக் குறிப்பிட்டுள்ளது. சவூதி அரேபியா, குவைட், கட்டார், ஜோர்தான், எகிப்து, ஈராக், ஆப்கானிஸ்தான், மலேசியா, சிங்கப்பூர், அமெரிக்கா உள்ளிட் நாடுகளுக்கு கட்டிட நிர்மானப் பணியாளர்கள் உதவியாளர்களாக வீட்டுப் பணிப்பெண்களாக வேலை வாய்ப்பு பெற்றுச்செல்வோர் பலவந்தமாக தொழில்களில் ஈடுபடுத்தப்படுவதுடன், துன்புறுத்தப்படுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

## இன்று

வைகாசி -08 ஞாயிற்றுக்கிழமை 22.06.2014

திதி: தசமி பி.ப 1.16
நட்சத்திரம்: அச்சுவினி

சுப நேரம்: 8.54 -10.24 வரை
இராகு காலம்: 4.24 - 5.54 வரை
எமகண்டம்: 11.54 - 1.24 வரை



## இன்றைய பலன்

22.06.2014

### வழங்கியவர் மணிகண்டன்


இன்று, சிலர் நடந்து கொள்கிற விதம் உங்களை சங்கடப்படுத்தலாம். பொறுமை காப்பதால், பெயர், புகழுக்கு குறை எதுவும் வராது. தொழில், வியாபாரம் செழிக்க, கூடுதல் கண்காணிப்புடன் செயல்படுவது நல்லது. பணவரவை விட செலவு அதிகரிக்கும். புத்திரரின் நற்செயலை ஊக்கப் படுத்துவீர்கள்.


இன்று, சந்தோஷ எண்ணம் அமைந்து, செயல்களில் உற்சாகம் பெறுவீர்கள். பிறருக்கு உதவுவதில், மனமுவந்து செயல்படுவீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க, புதிய அனுகூலம் உருவாகும். தாராள பணவரவு கிடைக்கும். வீட்டை அழகுபடுத்த, தேவையான கலை அம்சம் பொருத்திய பொருட்களை வாங்குவீர்கள்.


இன்று, உங்களின் தகுதி, திறமையை வளர்த்துக் கொள்வீர்கள். செயல்கள் நிறைவேற்றுவதில் இருந்த சிரமம் குறையும். தொழில், வியாபாரத்தில் தேவையான அபிவிருத்தி பணிபுரிவீர்கள். குடும்ப உறுப்பினர்கள், விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். பணியாளர்களுக்கு சலுகைப்பயன் கிடைக்கும்.


இன்று, உங்கள் பணி நிறைவேற சில சீர்திருத்த நடைமுறை, பின்பற்றுவது அவசியம். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேற கூடுதல் பணிபுரிவீர்கள். எதிர்பார்த்ததை விட, பணவரவின் அளவு குறையலாம். ஒவ்வாத உணவு வகை உண்ண வேண்டாம். புத்திரரின் கவனக் குறைவான நடவடிக்கையை கண்டிப்பதில் நிதானம் வேண்டும்.


இன்று, பிறரை விமர்சிக்க, சிலர், உங்களை பயன்படுத்துவர். கவனமுடன் பேசுவதால், தேவையற்ற சிரமம் தவிர்க்கலாம். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கை அடைய, புதிய முயற்சி வேண்டும். எதிர்பார்த்த பணவரவு கிடைப்பதில் தாமதம் இருக்கும். போக்குவரத்தில் கவனநடை நல்லது.


இன்று, உங்களுக்கு கடந்த காலத்தில் தொல்லை கொடுத்தவர், இடம் மாறிப்போகிற நன்னிலை உண்டு. செயல்களில் உத்வேகமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பணி இனிதே நிறைவேறும். உபரி பணவருமானம் கிடைக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு நிறைவேற்றுவீர்கள்.


இன்று, உங்களின் செயல்களை எளிதாக நிறைவேற்றுவீர்கள். மனதில் மகிழ்ச்சிகர சிந்தனை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் வளர்ச்சி ஏற்படும். தாராள பணவரவு உண்டு. வீட்டுக்கு தேவையான பொருட்கள் வாங்குவீர்கள். நண்பரின் வாழ்த்து கிடைக்கும்.


இன்று, உங்களின் தன்மான குணத்துக்கு சிறு சோதனை வரலாம். மனஅமைதியை பாதுகாப்பது நல்லது. தொழிலில் வருகிற இடையூறு பொறுமையுடன் சரி செய்வது அவ்சியம். அளவான பணவரவு கிடைக்கும். உறவினர் எதிர்பார்ப்பு மனதுடன் நடந்து கொள்வர். கூர்மையான பொருட்களை கவனமுடன் பயன்படுத்த வேண்டும்.


இன்று, உங்கள் நண்பரின் ஆர்வம் மிகுந்த கருத்தை விமர்சிக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத் தன்மை பாதுகாக்க வேண்டும். குடும்பத்தின் முக்கிய செலவுக்கு, கொஞ்சம் பணக்கடன் பெறுவீர்கள். அதிக விலை மதிப்புள்ள பொருட்களை இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம்.


இன்று, சமூகப்பணி புரிவதில் ஆர்வம் கொள்வீர்கள். உங்களின் தனித்திறமை வளர்ந்து, செயல்கள் சிறப்பு பெற உதவும். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். சராசரி பணவரவுடன் நிலுவைப் பணம் வசூலாகும். குடும்பத் தேவைகளின் முக்கியத்துவம் உணர்ந்து நிறைவேற்றுவீர்கள்.


இன்று, உங்கள் குடும்ப விஷயம் பற்றி, பிறரிடம் சொல்வதால், மனக் கவலை அதிகரிக்கும். தெய்வ நம்பிக்கையுடன் செயல்படுவதால், சிரமம் ஓரளவு குறையும். தொழில், வியாபாரம் செழிக்க, கூடுதல் உழைப்பு மட்டுமே உதவும். அளவான பணவரவு கிடைக்கும். அதிக நிபந்தனைகளுடன், பணக்கடன் பெற வேண்டாம்.


இன்று, உங்கள் தாயின் அன்பு, ஆசி பலமாக கிடைக்கும். சிறு செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத் தொடர்பு பலம் பெறும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். இயன்ற அளவில் அறப்பணி செய்து மகிழ்வீர்கள். உறவினர் வீட்டு சுப நிகழ்ச்சியில் கலந்து கொள்ள, அழைப்பு வரும்.

## சிந்திக்க சில வரிகள்

உன் முதுகுக்கு பின்னால்
பேசுபவர்களைப் பற்றி கவலைப்படாதே
நீ அவர்களுக்கு இரண்ட அடி முன்னால்
இருக்கிறாய் என்று பெருமைப்படு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முகத்தை ஜொலிக்க வைக்கும் மஞ்சள் நீராவி



மஞ்சளை அரைத்துப்பூசினால் தான் அழகு கிடைக்கும் என்றில்லை. மஞ்சள் கலந்த நீராவி கூட அழகைக் கூட்டும், தெரியுமா! மூன்று கப் தண்ணீரை கொதிக்க வையுங்கள். பசும் மஞ்சள் கிழங்கு ஒன்றை அரைத்து அதன் சாறை எடுத்து, கொதி நீரோடு கலந்து ஆவி பிடியுங்கள்.

அடுத்து ஒரு கைப்பிடி அளவு துளசியைப் போட்டு ஆவி பிடிக்க வேண்டும். பிறகு 3 எலுமிச்சை இலை அல்லது அரை மூடி எலுமிச்சை சாறு சேர்த்து ஆவி பிடியுங்கள். இத்தனையும் ஒன்றன் பின் ஒன்றாக செய்து முடித்ததும், கடைசியில் ஐஸ் கட்டியை முகம் மற்றும் கழுத்துப் பகுதிகளில் தேயுங்கள். (சருமத் துவாரங்கள் விரிவடையாமல் இருக்க ஐஸ் ஒத்தடம் அவசியம்) பின்னர், ஏதெனும் ஒரு ஃபேஸ் பேக்கை பூசி முகத்தை அலசுங்கள்.

அப்புறம் பாருங்கள்... ஹ நானே நானா... மாறினேனா..!" என்று உங்கள் விழிகள் விரியும். அந்தளவுக்கு துடைத்து வைத்த குத்து விளக்காக உங்கள் முகம் ஜொலிக்கும். சீசனில் தான் பசும் மஞ்சள் கிடைக்கும். இதனை காய வைத்தால், அது கஸ்தூரி மஞ்சள், பசும் மஞ்சள் கிடைக்காத சீசனில், மாற்றாக கஸ்தூரி மஞ்சளைப் பயன்படுத்தலாம்.

# மூக்கின் மேலுள்ள கருமையை போக்கும் வழிகள்

தொடர்ச்சியாக கண்ணாடியை அணிபவர்களுக்கு, மூக்கின் மேல் தழும்புகள் போன்று கருப்பாக காணப்படும். இத்தகைய தழும்புகள் ஏற்படுவதற்கு காரணம் கனமான கண்ணாடி மற்றும் மூக்கினை அழுத்தும் படியாக நீண்ட நேரம் கண்ணாடி அணிவது தான். இது முகத்தில் ஒருவிதமான அசிங்கமான தோற்றத்தைக் கொடுக்கும்.

கண்ணாடி அணிவதால் ஏற்படும் தழும்புகளை போக்குவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதை பார்க்கலாம்.

• தினமும் முகத்தை ஃபேஸ் வாஷ் பயன்படுத்தி கழுவி, மாய்ஸ்சுரைசரை தடவ வேண்டும். இவ்வாறு தினமும் 3 முறை செய்து வந்தால், அத்தகைய கருப்பான தழும்புகளை படிப்படியாக மறைவதை காணலாம்..

• உருளைக்கிழங்கை தழும்புள்ள இடத்தில் தடவி 10 நிமிடங்கள் மசாஜ் செய்து வந்தால், கண்ணாடியால் ஏற்படும் தழும்புகளை மறையும். இவ்வாறு வாரம் 4 நாட்கள் செய்ய வேண்டும்.

• எலுமிச்சை சாறும் கருமையான தழும்களை போக்க வல்லது. எலுமிச்சை சாற்றினை பஞ்சில் நனைத்து, தழும்புகள் உள்ள இடத்தில் தடவி மசாஜ் செய்து, 20 நிமிடம் ஊற வைத்து கழுவ வேண்டும். அதன் பின்னர் மாய்ஸ்சுரைசரை தடவ வேண்டும். இவ்வாறு தொடர்ந்து செய்து வந்தால் கருமை நிறம் மறையும்.

• கற்றாழை ஜெல்லும் சருமத்தில் ஏற்படும் பிரச்சனைகளை போக்குவதற்கு சிறந்த பொருள். ஏனெனில் அதிலும் கிளின்சிங் தன்மை அதிகம் உள்ளது. ஆகவே இதுவும் தழும்புகள் மற்றும் வடுக்களை போக்குவதற்கு வல்லது.

# பளிங்கு முகத்துக்கு பச்சை திராட்சை




* சருமத்தை மிருதுவாக்கி பளீரிட வைக்கிறது பச்சை திராட்சை. தினமும் 4 பச்சை திராட்சையை கைகளால் கசக்கி சாறு எடுத்து, முகத்தில் தடவுங்கள். 10 நிமிடம் கழித்து கழுவினால், சருமம் மிருதுவாகும்.

* எண்ணெய்ப் பசை சருமமாக இருந்தால், அரை டீஸ்பூன் பச்சை திராட்சைச் சாறுடன் அரை டீஸ்பூன் எலுமிச்சைச்சாறு கலந்து முகத்தில் தடவி மசாஜ் செய்யுங்கள். இதனால், தோலில் உள்ள அதிகப்படியான எண்ணெய் நீங்கி, பளிங் கு போல் முகம் பிரகாசிக்கும்.

* பருத்தொல்லைக்கு முற்றுப்புள்ளி வைப்பதுடன், பருக்கள் வராமலும் தடுக்கிறது பச்சை திராட்சைச் சாறு. இரண்டு புதினா இலைகளை இடித்து எடுத்த சாறு டன் அரை டீஸ்பூன் கஸ்தூரி மஞ்சள் கலந்து கொள்ளுங்கள்.

இது பேஸ்ட்டாகும் அளவுக்கு சிறிது திராட்சைச்சாறு, எலுமிச்சைச் சாறு கலந்து முகத்தில் பூசுங்கள். 10 நிமிடம் கழித்து கழுவினால், முகத்தில் இருக்கும் பருக் கள் மறையும். மேற்கொண்டு பருக்கள் வராமல் தடுக்கும். சருமமும் மிருதுவாகும்.

# நீரிழிவு நோய்க்கு சிறந்த மருந்தாகும் சுண்டைக்காய்



வயிற்றுக் கிருமிகள் உள்ளவர்கள் வாரம் மூன்று முறை சுண்டைக்காய் சாப்பிட்டு வந்தால் வயிற்றுக் கிருமி, மூலக் கிருமி போன்றவை அகலும். வயிற்றுப்புண் ஆறும். வயிற்றின் உட்புறச் சுவர்கள் பலமடையும். சுண்டைக் காயை பச்சையாக சமைத்து உண்ணலாம். நுண் புழுவால் உண்டான நோய்கள், வலி நோய்கள் இவற்றை போக்கும். மலச்சிக்கலைப் போக் கி அஜீரணக் கோளாறுகளை நீக்கும். வயிற்றுப் புழுக்களை வெளியேற்றும். குடற்புண்களை ஆற்றும். சுண்டைக் காயை உலர்த்தி பொடியாக்கி சூரணம் செய்து நீரில் கரைத்து சாப்பிட்டு வந்தால் ஆசனவாய் அரிப்பு நீங்கும்.

சுண்டைக்காய், கசப்புச்சுண்டை, கறிச் சுண்டை என்று கசப்புடனும் கசப்பின்றியும் கிடைக்கின்றது. சுகசப்பு சுண்டைக்காய், கறிச்சுண்டைக்காய் இரண்டுமே வாயுத் தொந்தரவு மற்றும் வயிற்றில் உள்ள கிருமிகளுக்கு நல்ல மருந்து. ஒரு குடும்பத்தினருக்கு (5 பேர் அடங்கியது) வருடத்திற்கு 2 லிட்டர் கசப்பு சுண்டைக்காய் உணவுடன் சேர்த்துச் சாப்பிட்டு வர, கிருமித் தொந்தரவு இருக்காது.

அமீபியாஸிஸ் போன்ற கிருமிகளையும் சுண்டைக்காய் விரட்டி விடும். நீரிழிவு நோய்க்கு மருந்தாகும் சுண்டைக்காய் கிருமிகளை ஒழிக்கும் சுண்டைக்காய் நாம் அன்றாடம் உணவில் சேர்க்கும் சுண்டைக்காய் ஏராளமான மருத்துவ குணங்களை கொண்டுள்ளது. இந்த காய் கசப்பு சுவை கொண்டிருந்தாலும் உடலுக்கு ஊட்டச்சத்தாக மாறி உடலை ஆரோக்கியமாகவும், நீண்ட ஆயுளையும் கொடுக்கிறது. சுண்டைக்காயின் இலைகள், வேர், கனி, முழுத்தாவரமும் மருத்துவ குணம் உடையது. இலைகள் ரத்தக் கசிவினை தடுக்கக் கூடியவை.

கனிகள் கல்லீரல் மற்றும் கணையம் தொடர்பான நோய்களுக்கு மருந்தாகின்றன. முழுத்தாவரமும் ஜீரணத் தன்மை கொண்டது. சுண்டைக்காயில் புரதம், கால்சியம், இரும்புச்சத்து அதிகம் நிறைந்துள்ளன. இதனால் உடல் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது. இதை வாரம் இருமுறை சமைத்து சாப்பிட்டால் இரத்தம் சுத்தமடையும். உடற்சோர்வு நீங்கும். இதனை பச்சையாக பறித்து தொக்கு செய்தோ, கூட்டு செய்தோ சாப்பிடலாம். சுவாசம் சம்பந்தப்பட்ட நோய்களின் தாக்குதலுக்கு இலக்கானவர்கள் அடிக்கடி சுண்டைக்காயை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

மலக்கிருமிகள் மற்றும் மூலக்கிருமிகள் அகலும். சுண்டைக்காயுடன், மிளகு, கறிவேப்பிலை சேர்த்து கஷாயம் செய்து சிறு குழந்தைகளுக்குக் கொடுத்து வருவது நல்லது. முற்றின சுண்டைக்காயை நசுக்கி மோரில் போட்டு ஊறவைத்து வெயிலில் காய வைத்து எடுத்து பத்திரப்படுத்திக் கொண்டு தினமும் எண்ணெயில் வறுத்து சாப்பிடலாம் அல்லது வற்றல் குழம்பாக்கி சாப்பிடலாம்.

இது மார்புச்சளியைப் போக்கும். குடலில் உள்ள அசடுகளை நீக்கும். சுண்டை வற்றலை நெய்யில் வறுத்து பொடியாக்கி சோற்றுடன் சேர்த்து பிசைந்து சாப்பிட்டு வந்தால் நீரிழிவு நோயினால் உண்டாகும் கை கால் நடுக்கம், மயக்கம், உடற்சோர்வு, வயிற்றுப் பொருமல் முதலியவை நீங்கும். சுண்டைக்காயை இரண்டாக நறுக்கி அதனுடன் பூண்டு, சின்ன வெங்காயம், மிளகு, சீரகம், கறிவேப்பிலை, கொத்தமல்லி இலை சேர்த்து நன்கு கொதிக்க வைத்து சூப் செய்து அருந்தி வந்தால் கபக்கட்டு, ஈளை, இருமல், மூலச்சூடு, மூலக் கடுப்பு, மூலத்தில் ரத்தம் வெளியேறுதல் போன்றவை நீங்கும்.

இரத்தத்தை சுத்தப்படுத்தி சிறுநீரைப் பெருக்கும். உடல் சோர்வை நீக்கும். தலைச்சுற்றல், வாந்தி, மயக்கம் நீங்கும். மேலும் மார்புச்சளி, தொண்டைக் கட்டு போன்றவற்றிற்கு சிறந்த நிவாரணியாகும். ஆஸ்துமா, காசநோயாளிகள் இதனை அருந்திவந்தால் பாதிப்பு குறையும்.

# ஆயுளை அதிகரிக்கும் உடற்பயிற்சி

ஒரு மணி நேரம் முறையான உடற்பயிற்சி செய்வதால் தினமும் உடலில் சேரும் கலோரியை, குறைக்க முடியும். உடற்பயிற்சி புத்துணர்ச்சியைத் தரும். மூளை செயல்பாட்டுக்கு உதவும். நரம்பு மண்டலத்தைச் சீராக வைத்திருக்க உதவும்.

உடல் பருமனைக் குறைக்க சிறந்த வழி தொடர்ந்து உடற்பயிற்சி செய்வது தான். உடல் எடை குறைப்பதில் நீச்சல் பயிற்சி சிறந்த இடத்தை பெறுகிறது. தினமும் ஒருமணி நேரம் நீந்தினால் 650 கலோரி குறையும். இதில், நடைப்பயிற்சியில் கிடைப்பதைவிட பலன் அதிகம். நீச்சல், உடலிலுள்ள எல்லா தசைக்கும் வேலை கொடுக்கிறது. இதயத்துக்கும் நுரையீரலுக்கும் வலுசேர்க்கிறது.

மன அழுத்தத்தைக் குறைக்கிறது. தொடர்ந்து உடற்பயிற்சி செய்தால் இதய நோய்கள் ஏற்படாது ரத்த அழுத்தம் அதிகமாகாமல் சீராக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமியர்கள் மீதான வன்முறை கிழக்கிற்கும் பரவப் போகின்றதா?

**நேற்றைய தொடர்ச்சி..........**



தமிழ் மக்களை தாக்கி, வன்முறைகளில் அவர்கள் இறங்கிவிடக்கூடிய அபாயமும் அங்கு காணப்பட்டது. முஸ்லிம் இளைஞனைக் கடத்தியது விடுதலைப் புலிகளே என்று அத்தாவுல்லா போன்றவர்கள் அடித்துப் பேசினார்கள்.

முஸ்லிம்களைத் தூண்டும் வகையில் ஆவேசமாக அறிக்கைகளையும் விடுத்தார்கள். அப்பிரதேசத்தில் மூன்று தினங்கள் தொடர்ந்து ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கும் அளவிற்கு நிலைமை மிக மோசமாக இருந்தது. தமது அமைப்பிற்கும் இந்தக் கடத்தலுக்கும் சம்பந்தமில்லை என்று விடுதலைப் புலிகள் தெரிவித்திருந்த போதிலும் அவர்களை நம்புவதற்கு எவரும் தயாராக இருக்கவில்லை.

இச்சம்பவம் நடைபெற்று மூன்றாம் நாள் 18ம் திகதி வெள்ளிக் கிழமை அதிகாலை, கடத்தப்பட்டதாகக் கூறப்பட்டவனின் வீட்டை பொலிஸார் திடீரென்று சுற்றிவளைத்தபோது, குறிப்பிட்ட வாலிபன் தனது வீட்டில் சாவகாசமாக அமர்ந்திருப்பதைக் கண்டு அவனைக் கைது செய்தார்கள். தமக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலைத் தொடர்ந்தே அந்த வாலிபனின் வீட்டில் தாம் தேடுதல் நடாத்தியதாக பொலிஸார் தெரிவித்திருந்தார்கள்.

கைது செய்யப்பட்டு பொலிஸாரால் விசாரிக்கப்பட்ட அப்துல் வஜீட் என்ற அந்த வாலிபன், வெளிநாடு செல்வதற்கு தனக்கு பணம் தேவைப்பட்டதால், இந்த கடத்தல் நாடகத்திற்கு தான் சம்மதித்ததாக தெரிவித்தான்.

இந்தக் கடத்தல் நாடகத்தின் பின்னணியில், ஈ.பி.டி.பி. அமைப்பினரும், முஸ்லிம் குழு ஒன்றும் இருந்தது பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது.

கடத்தல் பழியை புலிகள் மீது போட்டுவிட்டு, புலிகளால் முஸ்லிம்களுக்கு• பாதுகாப்பு இல்லை என்று வெளி உலகிற்கு காண்பிக்க இந்த கடத்தல் நாடகம் மேற்கொள்ளப்பட்டிந்ததாக் கூறப்பட்டது.

அதுவும் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெலல்கிசன் மற்றும் நோர்வே தூதுக் குழுவினர் இலங்கை வந்து புலிகளின் தலைவரைச் சந்தித்து அடுத்த கட்டப் பேச்சுவார்த்தைகள் பற்றி ஆராய இருந்த காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்த கடத்தல் நாடகம், புலிகளுக்கும், சமாதான முயற்சி களுக்கும் ஒரு தர்ம சங்கடத்தை ஏற்படுத்தும் நோக் கத்தில் திட்டமிடப்பட்டிருந்தது.

ரோக்கியோ மாநாட்டில் விடுதலைப் புலிகள் கலந்து கொள்வது பற்றிய இழுபறி நடைபெற்றுக் கொண்டிருந்த ஒரு முக்கியமான சந்தர்ப்பத்தில், புலிகளுக்கு மேலும் நெருக்கடி கொடுக்கும் நோக்கத்தில், மற்றொரு தமிழ்-முஸ்லிம் இனக்கலவரத்தைத் தூண்டும் முயற்சியாக புலனாய்வுப் பிரிவினரால் இந்தச் சதி மேற்கொள்ளப்பட்டிருந்தது.



(அன்றைய காலகட்டத்தில் பொலிஸ்துறை பிரதம மந்திரி ரணிலின் தலைமையிலும், இராணுவத்தினர் ஜனாதிபதி சந்திரிகா தலைமையின் கீழும் செயற்பட்டுவந்தது குறிப்பிடத்தக்கது)

சம்பவம்-2

2003ம் ஆண்டு மே மாதம் 15ம் திகதி நள்ளிரவு "ஹுசைன் என்ற 27 வயது முஸ்லிம் இளைஞர் வெட்டிக் கொலை செய்யப்பட்ட நிலையில் அவரது உடல் கிண்ணையடி என்ற தமிழ் கிராமத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஓட்டைமாவடி, வாழைச்சேனை பிரதேசங்களில் பதற்றநிலை ஏற்பட்டதுடன், தமிழ் முஸ்லிம் கலவரம் ஒன்றும் தோன்றுவதற்கான ஏதுநிலை உருவானது.

வழமை போலவே, இந்தச் சம்பவம் விடுதலைப் புலிகளாலேயே மேற்கொள்ளப்பட்டதாக முஸ்லிம் அரசியல்வாதிகள் அறிக்கைகளை வெளியிட ஆரம்பித்திருந்தார்கள்.

ஒருவேளை புலிகள்தான் இதனைச் செய்திருப்பார்களோ என்று தமிழ் மக்களே அஞ்சும் அளவிற்கு, இந்தக் கொலை பற்றிய பிரசாரங்கள் கச்சிதமாக கட்டவிழ்த்துவிடப்பட்டிருந்தன.

ஆனால் இந்தக் கொலைச் சம்பவத்தின் உண்மையான சூத்திரதாரிகள் ஒரு மாதம் கடந்த நிலையில் பொலிஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டு, கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, இந்தச் சம்பவம் பற்றிய உண்மைகள் வெளிவர ஆரம்பித்தன.

நாவலப்பிட்டியைச் சேர்ந்த "ஹுசைன் என்ற அந்த இளைஞன், ஓட்டமாவடியில் தனியார் மருத்துவமனை ஒன்றை நடாத்திவரும் பெண் வைத்தியருடன் காதல் தொடர்புகளை வைத்திருந்தார். அடிக்கடி அவர் ஓட்டமாவடி வந்து பெண் வைத்தியருடன் தங்கியும் செல்வது வழக்கம். யாராவது கேட்டால், அது தனது உறவுக்காரப் பெண் என்று கூறிச் சமாளித்துவிடுவார்.

அதேவேளை, அந்த பெண் வைத்தியருடன் ஏற்கனவே தொடர்பு வைத்திருந்த ஹஜ்ஜி என்ற இராணுவ உயரதிகாரி, வைத்தியரின் இந்த புதிய உறவை அறிந்து மிகவும் கோபம் கொண்டார்.

சரியான ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருந்த அவர், 15.05.2003 அன்று "ஹுசைனை வான் ஒன்றில் கடத்திச் சென்று கொலை செய்துவிட்டார்.

பிணத்தை ஆட்டோ ஒன்றில் எடுத்துச் சென்று மிராவோடை- கிண்ணையடி வீதியில், தமிழ் பிரதேசத்தில் போட்டுவிட்டுச் சென்றுவிட்டார்.

தீவிர விசாரணையை மேற்கொண்ட வாழைச்சேனைப் பொலிஸார், இராணுவ அதிகாரி ஹஜ்ஜியையும், ஆட்டோச் சாரதியையும், வேறு சில இராணுவ வீரர்களையும் கைது செய்தார்கள்.

இராணுவத்தின் புலனாய்வு பிரிவில், தமிழ் குழு உறுப்பினர்களின் நடவடிக்கைக்கு பொறுப்பாக இருக்கும் கப்டன் ஹஜ்ஜி இந்த கொலையில் சம்பந்தப்பட்டிருப்பதால்தான், இந்த கொலை பற்றிய சந்தேகம் பெண் பிரச்சினை என்பதைக் கடந்து இரணுவச் சதி என்ற கோணத்திலும் பார்க்கப்பட்டது. கொலை செய்யப்பட்ட முஸ்லிம் இளைஞனின் பிணம் தமிழ் பிரதேசத்தின் மத்தியில் போடப்பட்டதானது, தமிழ்-முஸ்லிம் இனக்கலவரம் ஒன்றை தூண்டிவிடும் நோக்கத்தில் மேற்கொள்ளப்பட்டது என்ற கோணத்தில் ஆராயப்பட்ட பொழுது, இந்த விசாரணைகள் தொடர்பாக சற்று அடக்கி வாசிக்கும்படி விசாரணையை மேற்கொண்ட வாழைச்சேனைப் பொலிஸாருக்கு மேலிடத்தில் இருந்து பலத்த நெருக்குதல்கள் வர ஆரம்பித்தன.

**சம்பவம்-3**

21.05.2003 அன்று புதன் கிழமை, விடுதலைப் புலி உறுப்பினரான பூவண்ணன் (காத்தமுத்து கோணேஸ்வரன்) என்பவர் கொலை செய்யப்பட்டு, அவரது உடல் நிந்தவூர் என்ற முஸ்லிம் கிராமத்தில் கண்டெடுக்கப்பட்டது.

இந்த விடயம் தமிழ் மக்கள் மத்தியில் பாரிய உணர்வலைகளை ஏற்படுத்தியிருந்ததுடன், முஸ்லிம்களுக்கு எதிராக தமிழ் மக்களை கிளர்ந்தெழச் செய்யவும் காரணமாக இருந்தது.கொலை செய்யப்பட்ட பூவண்ணன்,





விடுதலைப் புலி களின் புலனாய்வு பிரிவைச் சேர்ந்த முக்கிய உறுப்பினர். காரதீவு பணிமனையில் பணியாற்றிக் கொண்டிருந்தவர். இவர் கொலை செய்யப்பட்டதும், இவரது உடல் தனி முஸ்லிம் கிராமம் ஒன்றின் நடுவில் கண்டெடுக்கப்பட்டதும், விடுதலைப் புலி உறுப்பினர்கள் மத்தியிலும் பாரிய சினத்தை ஏற்ப டுத்தியிருந்தது.

எந்த நேரத்திலும் எதுவும் நடந்துவிடலாம் என்று மக்கள் அச்சம் அடைந்திருந்த நேரத்தில், விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு- அம்பாறை அரசியல்துறைப் பணியகம் ஒரு அறிக்கையை வெளியிட்டிருந்தது.

தமிழ், முஸ்லிம் மக்கள் விழிப்பாக இருங்கள் என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட அந்த அறிக்கையில், காரைதீவில் வைத்து ஈ.பி.டி.பி. கும்பலினால் கடத்திச் செல்லப்பட்ட பூவண்ணன் கொலை செய்யப்பட்டு, அவரது சடலம் முஸ்லிம் கிராமமான நிந்தவூரில் போடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தமிழ் முஸ்லிம் மக்கள் மத்தியில் குரோதத்தை தோற்றுவித்து இரு சமுகங்களுக்கும் இடையில் இனமோதலை ஏற்படுத்தி வேடிக்கை பார்க்கும் நோக்கத்தில் இந்தச் சம்பவம் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக புலிகள் தமது அறிக்கையில் தெரிவித்திருந்தார்கள்.

நாட்டில் தற்பொழுது தோன்றியுள்ள அமைதிச் சூழலை சீர்குலைத்து, மீண்டும் ஒரு யுத்தத்தை ஏற்படுத்தி சுயலாபம் தேட முனையும் தீய சக்திகள் தற்பொழுது இதுபோன்ற சதி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்த விடுதலைப் புலிகள், இதனையிட்டு தமிழ் முஸ்லிம் மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும் என்றும் கோரியிருந்தார்கள்.

பெரிய அளவில் உருவாக இருந்த தமிழ்-முஸ்லிம் கலவரம் ஒன்று, விடுதலைப் புலிகளின் சரியான கணிப்பீடு காரணமாக தற்காலிகமாக தனிக்கப்பட்டது.

**தொடரும்..........**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்முறையை தூண்டியது மதகுருவின் உரையே பாராளுமன்றில் சம்பந்தன்



(யாழ்ப்பாணம்)
இந்த நாட்டின் பொலிஸ் படையும், ஆயுதப் படைகளும் சிங்களமே என்று மதகுரு சூளுரைத்துப் பேசியமையே வன்முறையைத் தூண்டியது. அதன் பின்னர் இடம்பெற்ற ஊர்வலத்தின் போதே முஸ்லிம்கள் இலக்கு வைத்துத் தாக்கப்பட்டனர். இவ்வாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

பேருவளை, அளுத்கம நிலைமை குறித்து கடந்த செவ்வாயன்று நாடாளுமன்றத்தில் நீண்ட உரை ஒன்றை இரா.சம்பந்தன் எம்.பி. ஆற்றினார் என்பது தெரிந்ததே. அதன் முடிவிலேயே அவர் விடயத்தை நேரடியாகப் போட்டுடைத்தார். இதுதொடர்பில் அந்த உரையில் அவர் தெரிவித்துள்ளதாவது,

என்னுடைய உரையை முடிப்பதற்கு முன்னர் மனித உரிமைகள் விவகாரத்தோடு சம்பந்தப்படுகின்ற அளுத்கம, பேருவளை, தர்கா நகர்ப் பகுதிகளில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து சில விடயங்களைக் குறிப்பிட அனுமதிக்கும்படி வேண்டுகிறேன். சம்பந்தப்பட்டோர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். அத்தோடு விடயம் முடிந்துவிட்டது.

வணக்கத்துக்குரிய மதகுரு ஒருவரின் பேச்சின் வீடியோப் பதிவை நான் பார்த்தேன். கடும் சொற்பிரயோகங்கள் கொண்ட பேச்சு அது வன்முறையைத் தூண்டும் மிக மோசமான பேச்சு, வன்முறையை நாடும் படி மக்களைத் தூண்டும் பேச்சு. குறிப்பிட்ட ஒரு சமூகத்தை இழிவுபடுத்திய அந்தப் பேச்சில் இந்த நாட்டின் பொலிஸ் படையும் ஆயுதப் படையும் சிங்களப் படைகள் என்று கூறப்பட்டது.

அதிகளவில் மக்கள் கூட்டப்பட்டிருந்த அந்தக் கூட்டத்தில் இந்தப் பேச்சைத் தொடர்ந்து பலத்த கைதட்டலுடன் அதற்கு வரவேற்பளிக்கப்பட்டது, தொடர்ந்து ஊர்வலம் ஒன்று நடந்தது. அந்த ஊர்வலம் நடக்கையில் கடைகள் தாக்கப்பட்டன, வீடுகள் தாக்கப்பட்டன, பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டன, மக்கள் தாக்கப்பட்டனர். பெரும் எண்ணிக்கையானோர் காயமடைந்தனர். இருவர் உயிரிழந்தனர். முஸ்லிம் மக்களுக்குப் பெரும் சேதம் ஏற்பட்டது.

அப்போது, சட்டத்தை நிலைநிறுத்தும் அதிகாரிகள் ஏன் வாளாவிருந்தனர்? அவர்கள் ஏன் செயலிழந்து நின்றனர்? அவர்கள் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? தொழிற்சங்க உரிமைகளையோ, சம்பவத்தையோ வேதனத்தையோ கோரி தொழிலாளர் ஊர்வலம் போவதற்குக் கூட நீங்கள் தடை விதிக்கின்றீர்கள்.

பல்கலைக்கழகத்தில் தாங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் பல்கலைக்கழக மாணவர்கள் பகிஷ்கரிப்புச் செய்து எதிர்ப்புக் காட்டுவதைக் கூட நீங்கள் தடுக்கின்றீர்கள். அப்படியாயின் இந்த ஊர்வலத்தை மட்டும் நீங்கள் ஏன் தடுக்கவில்லை?

இந்த ஊர்வலம் தடுக்கப்படக்கூடாது என்பது அரசின் தீர்மானமா? சட்டத்தை நிலைநாட்ட வேண்டிய அதிகாரிகள் வேண்டுமென்றே தமது கடமையைத் தளர்த்தி நின்றார்களா? தங்களுடைய பொறுப்பை ஆற்றாமல் அந்தக் கூட்டத்தினர் தங்களின் கைவரிசையைக் காட்டுவதற்கு இடமளித்து நின்றார்களா? இந்தக் கேள்விகளுக்கு எங்களுக்குப் பதில் வேண்டும்.

இந்த நாட்டின் ஒரு பிரஜை, அவன் என்ன இனத்தைச் சேர்ந்தவன் என்ற வேறுபாடில்லாமல் அவனுக்கான பாதுகாப்பை அளிப்பதற்கு சட்டத்தின் பாதுகாப்பு எதுவரை வழங்கப்படும் என்பதில் அரசின் திட்டவட்டமான, தெளிவான நிலைப்பாடு என்ன என்பதை நாம் அறிய விரும்புகிறோம் என்று தெரிவித்துள்ளார்.

# யாழில் உள்ள பள்ளிவாசல்களுக்கு அருகில் விசேட அதிரடிப் படையினர் குவிப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்.குடாநாட்டில் பள்ளிவாசல்கள் மீதும், முஸ்லிம் தொழுகை இடங்கள் மீதும் கடந்த சில நாட்களாக தாக்குதல்கள் நடத்தப்படும் நிலையில் குடாநாட்டிலுள்ள பள்ளிவாசல்களின் சுற்றாடலில் விசேட அதிரடிப்படையினர் மற்றும் படையினரின் நடமாட்டம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

நேற்றய தினம் இரவு 11.45மணியளவில் யாழ்.சோனக தெரு பகுதியில் அமைந்துள்ள ஹமால் பள்ளிவாசல் மீது இனந் தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தியிருக்கும் நிலையில் குறித்த தாக்குதல் சம்பவம் இராணுவ புலனாய்வாளர்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மக்கள் குற்றம்சாட்டியிருக்கின்றனர்.

இந்நிலையில் நேற்றய தினம் மாலை தொடக்கம் மானிப்பாய் பள்ளிவாசல், யாழ்.சோனக தெருவில் உள்ள பெரி ய பள்ளிவாசல் ஆகியவற்றின் சுற்றாடலில் பெருமளவு படையினர் மற்றும் விசேட அதிபரப்படையினர் நிறுத்தப்பட்டிருந்த நிலையிலேயே,நேற்றய தினம் இரவு தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது. மேலும் குறித்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றவுடன் அந்தப் பகுதியில் மக்கள் பெருமளவில் கூடியபோதும் தாக்குதல் நடத்தியவர்களை காணமுடியவில்லை என மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இன்றைய தினமும் நாவாந்துறை, மற்றும் பெரிய பள்ளிவாசல் ஆகிய பகுதிகளில் பெருமளவில் படையினர் மற்றும் விசேட அதிரடிப்படையினர் நிலைகொண்டுள்ளதுடன், ரோந்து நடவடிக்கைகள் மற்றும் திடீர் வீதிச்சோதனைகளையும் நடத்திவருகின்றனர்.

இதேவேளை நேற்றய தினம் இரவு ஹமல் பள்ளிவாசல் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் இனவாத நோக்கில் யாழ்.குடாநாட்டிலும் வன்முறைகளை தூண்டும் வகையில் நடத்தப்பட்டதாகவும், இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக பெரிதுபடுத்தாமல் இருக்கவே தாம் விரும்புவதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

# முல்லைத்தீவிலிருந்து தமிழகத்திற்கு அகதியாகச் சென்றுள்ள குடும்பம்



(முல்லைத்தீவு)
தமிழ்நாடு, தனுஷ்கோடி அரிச்சல் முனைக்கு முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த நான்கு பேர் படகுமூலம் அகதிகளாகச் சென்றடைந்துள்ளனர்.

முல்லைத்தீவு பகுதியை சேர்ந்த அந்தோணி குருஸ் இவரது மனைவி செல்வி குருஸ் மற்றும் இவர்களது குழந்தைகளான ரோமேரியா, ரியான்ச் ஆகிய நான்கு பேருமே தமிழகம் சென்றுள்ளனர்.

இராமநாதபுரம் மாவட்டம் தனுஸ்கோடி பகுதியில் இரண்டு குழந்தைகள் உட்பட நான்கு பேர் படகு மூலம் இலங்கையில் இருந்து வந்ததாக அந்த பகுதியை சேர்ந்த மீனவர்கள் கடலோர காவல்துறைக்கு தகவல் கொடுத்தனர்.

இதனையடுத்து அங்கு விரைந்த கடலோர காவல்துறையினர் இலங்கையில் இருந்து வந்தவர்களை முகுந்தராயர் சத்திரம் காவல்துறை சோதனை சாவடிக்கு அழைத்துச் சென்றனர். அங்கு அவர்களிடம் மேற்கொண்ட விசாரணையின் போது,

தனது மனைவி செல்வி குருஸ் கிட்னி பாதிக்கப்பட்டுள்ளார். இலங்கையில் தொழில் மற்றும் வேலை வாய்ப்பு கிடைக்க மிகவும் சிக்கலாக இருக் கிறது. இதனால் மனைவி செல்வி குருஸ்க்கு சிகிச்சை அளிக்க போது மான பணம் கிடைக்கவில்லை.

எனது உறவினர் தமிழகத்தின் புதக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அகதிகள் முகாமில் இருக்கின்றனர். அவர்களின் உதவியுடன் இங்கு வந்த சிகிச்சை பெறலாம் என்பதால் தலைமன்னாரில் இருந்து 20 ஆயிரம் ரூபா பணம் கொடுத்து படகு மூலம் தனுஸ்கோடிக்கு வந்தோம்என்று அந்தோணி குருஸ் தெரிவித்தார்.

இவர்களிடம் மத்திய, மாநில உளவுப் பிரிவு பொரிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். அத்துடன் கடலோர காவல்துறையினர் மண்டபம் அழைத்து சென்று விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# பரிசை நம்பி பத்தாயிரத்தை கோட்டை விட்ட குடும்பஸ்தர்

(யாழ்ப்பாணம்)
டயலொக் நிறுவனத்திடம் இருந்து பரிசு வந்துள்ளதாக தெரிவித்த தகவலையடுத்து பத்தாயிரம் ரூபா பணத்தைப் பரிதாபகரமாக இழந்துள்ளார் குடும்பஸ்தர் ஒருவர்.

மீசாலைப் பகுதியைச் சேர்ந்த குடம்பஸ்தர் ஒருவருக்கு நேற்று முன் தினம் காலை டயலொக் நிறுவனத்தில் இருந்து குலுக்கல் மூலம் மூன்றரை லட்சம் ரூபா பரிசு வீழ்ந்துள்ளதாக அழைப்பு ஒன்று வந்துள்ளது. இதன் பின்னர் அந்தப் பணத்தைப் பெறுவதற்கு பத்தாயிரம் ரூபா பணத்தை வங்கி இலக்கம் ஒன்றிற்கு அனுப்புமாறு அந்தத் தொலைபேசியில் இருந்து கதைத்த நபர் தெரிவித்தள்ளார்.

இதனை நம்பி அந்தப் பணத்தை ஈசற் மூலம் வங்கிக்கு அனுப்பியுள்ளார் மீசாலை நபர். இதன் பின்னர் தான் காசு அனுப்பியதை தனக்கு தொலைபேசி அழைப்பு எடுத்த நபருக்குத் தெரிவித்துள்ளார். உடனே மேலும் 18 ஆயிரம் ரூபா அனுப்பினால் உங்களுக்கு 9 லட்சம் கிடைக்கும் என அந்த நபர் சொன்ன போது சந்தேகமடைந்த மீசாலை நபர் சாவகச்சேரி டயலொக் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு விசாரித்த போது அவை எல்லாம் போலி எனத் தெரியவந்துள்ளது.

இதனால் மீசாலையைச் சேர்ந்த குடம்பஸ்தர் பெரும் ஏமாற்றமடைந்ததாகத் தெரியவருகின்றது.

# திருநெல்வேலி சந்தைக்கு அருகில் உள்ள சாராய பாரில் காவாலிகள் மோதல்

(யாழ்ப்பாணம்)
யாழ் திருநெல்வேலி சந்தைக்கு அருகில் உள்ள சாராய பாரில் யாழ் பல்கலைக்கழகத்தில் படிக்கும் சில காவாலி மாணவர்கள் மோதலில் ஈடுபட்டதாகத் தெரியவருகின்றது.

சாராய பாரினுள் வந்த மாணவன் ஒருவனைப் பார்த்து இன்னொருவன் மாணவி ஒருவரின் பெயரைக் கூறி நக்கல் அடித்த போதே சண்டை மூண்டுள்ளது. இருவரும் கடுமையாக மோதியதாகவும் சாராய பாரில் இருந்த மற்றவர்கள் அவர்கள் இருவரையும் வெளியே இழுத்து வந்து விட்டதாகவும் தெரியவருகின்றது.
அதன் பின்னர் அடி வாங்கிய மாணவக் காவாலி மற்றவனின் மோட்டார் சைக்கிளை கால்களால் உதைத்து வீழ்த்திய பின் ஓடித்தப்பியதாக அப் பகுதியில் நின்றவர்கள் தெரிவிக்கின்றனர்.

# முதலிரவை தல்செவனவில் கொண்டாடத் துடிக்கும் வெளிநாட்டு தமிழ் இளைஞர்கள்




(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் வந்து கலியாணம் செய்து தமது முதலிரவை படையினரால் பராமரிக்கப்படும் தல்செவன சுற்றுலா விடுதியில் கொண்டாட புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் தமிழ் இளைஞர்கள் விரும்புவதாகத் தெரியவருகின்றது. யாழ்ப்பாணத்தில் உள்ள ஏனைய ஹோட்டல்களிலும் பார்க்க உயர்பாது காப்பு வலயத்தில் உள்ள தல்செவன ஹோட்டல் மற்றும் காரைநகரில் உள்ள படையினரின் பராமரிப்பில் உள்ள கோட்டை ஆகியவற்றில் அறைகள் எடுத்துத் தங்க வெளிநாடுகளில் வாழும் தமிழ் இளைஞர்களும் தமிழ்க் குடும்பங்களும் விரும்புவதாக கனடாவில் இருந்து வந்து யாழ்ப்பாணத்தில் திருமணம் செய்த இளைஞர் ஒருவர் தெரி வித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈராக்-சிரியா எல்லை சாவடியை கைப்பற்றிய ஐஎஸ்ஐஎஸ் போராளிகள்

(பாக்தாத்)
ஈராக் மற்றும் சிரியாவின் இஸ்லாமிய நாடு (ஐஎஸ் ஐஎஸ்) என்ற பெயரில். ராணுவத்துடன் சண்டையிட்டு வரும் போராளிகள் குழு இன்று ஈராக்-சிரியா எல்லையில் அதிரடி தாக்குதல் நடத்தி ராணுவ சாவடியை கைப்பற்றியது. இந்த எல்லையில் நேற்று நடந்த சண்டையில் ஈராக் ராணுவத்தைச் சேர்ந்த 30 வீரர்கள் கொல்லப்பட்டதாக பாதுகாப்புத்துறை அதிகாரிகள் இன்று தெரிவித்தனர்.

முதலில் எல்லை சாவடி அருகில் உள்ள காயிம் அருகில் உள்ள எல்லையில் புகுந்த போராளிகள் ராணுவத்துடன் கடும் மோதலில் ஈடுபட்டனர். நாள் முழுவதும் நடந்த சண்டைக்குப் பிறகு எல்லை சாவடியை போராளிகள் கைப்பற்றியதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இருப்பினும் மக்கள் அந்த பகுதியில் சுதந்திரமாக சென்று வர அனுமதித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

காயிம் எல்லை சந்திப்பை போராளிகள் கைப்பற்றியிருப்பது பிரதமர் நூரி அல் மாலிகியின் அரசுக்கு மேலும் பின்னடைவாக கருதப்படுகிறது. மிகப்பெரிய நகரான மொசூலை கைப்பற்றி தலைநகர் பாக்தாத்தை நோக்கி முன்னேறி வரும் போராளிகளை தடுத்து நிறுத்த முடியாமல் அரசு திணறி வருகிறது.

## ஈராக் பேச்சுவார்த்தைக்காக ஐரோப்பா, மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்லும் ஜான் கெர்ரி



வாஷிங்டன்,
ஈராக்கில் தற்போது நடைபெற்றுவரும் இனக்கலவரங்களில் போராளிகளின் ஆதிக்கம் ஓங்கியுள்ளதால் அந்நாட்டின் பிரதமர் நூரி அல் மாலிகி அமெரிக்காவின் உதவியை நாடியுள்ளார். இதனைத் தொடர்ந்து கடந்த வியாழக்கிழமை அன்று ஈராக்கிற்கு 300 ராணுவ ஆலோசகர்களை அனுப்புவதான தனது திட்டத்தை அமெரிக்க அதிபர் பாரக் ஒபாமா வெளியிட்டார். மேலும் ஈராக்கின் ஸ்திரத்தன்மையை நிலைநாட்ட தங்கள் நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜான் கெர்ரியும் ஒரு ராஜதந்திர பயணத்தில் ஈடுபடுவார் என்றும் ஒபாமா தெரிவித்தார். அதன்படி நாளை முதல் 27-ம் தேதி வரை ஜான் கெர்ரி தனது சுற்றுப் பயணத்தை மேற்கொள்ளுகின்றார். முதலில் ஜோர் டானின் தலைநகர் அம்மானுக்கு செல்லும் கெர்ரி அந்நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் நாசெர் ஜுடேவைச் சந்திக்கின்றார். அதன்பின் பிரஸ்ஸல்ஸ் மற்றும் பாரிஸ் ஆகிய இடங்களுக்கும் செல்லும் இவர் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மை உள்ளடக்கிய ஒரு அரசை ஈராக்கில் உருவாக்குவது குறித்து ஆலோச னை நடத்துவார் என்று அமெரிக்க வெளியுறவுத் துறையின் செய்தித் தொடர்பாளர் ஜென் சகி நேற்று தெரிவித்துள்ளார்.

சிரியாவின் நிலை குறித்தும் இந்த சந்திப்பில் விவாதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மத்திய கிழக்கு நாடுகளிலும் ஈராக்கின் நிலை குறித்து விவாதிக்கும் கெர்ரி அதன்பின் நேட்டோ வெளியுறவுத்துறை அமைச்சர்கள் கூட்டத்திலும் கலந்து கொள்கின்றார். இவர் ஈராக்கிற்கும் விரைவில் செல்லக்கூடும் என்று தகவல்கள் வெளிவந்துள்ள போதிலும் அதற்கான தேதியையோ, அதிகாரபூர்வ அறிவிப்பையோ அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிடவில்லை.

## நெஸ் வாடியாவை மிரட்டிய நிழல் உலக தாதா யார்?



(இந்தியா)
நடிகை பிரீத்தி ஜிந்தா விவகாரத்தில், நெஸ் வாடியாவுக்கு மிரட்டல் விடுத்த நிழல் உலக தாதா பற்றி தகவல்கள் வெளியாகியுள்ளது.பிரீத்தி ஜிந்தா, தனது முன்னாள் காதலரான நெஸ் வாடியா மீது பாலியல் தொந்தரவு புகார் செய்தார். இந்த புகாரின் பேரில் மெரீன் டிரைவ் பொலிசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

இந்நிலையில் புகார் கொடுத்த பிரீத்தி ஜிந்தாவிடம் கூடுதல் விவரங்களை சேகரிக்க பொலிசார் முடிவு செய்தனர். அதன் பிறகே நெஸ் வாடியாவிடம் விசாரிக்கப் படும் என்றும் தெரிவித்தனர். இதற்கிடையே நெஸ் வாடியாவின் தந்தை நுஸ்லி வாடியாவின் செயலாளர்கள் 2 பேருக்கு கடந்த திங்கட்கிழமை தொலைபேசியில் மிரட்டல் வந்துள்ளது. இந்த தகவலை நெஸ் வாடியாவிடம் தெரிவிக்கும் படியும், பிரீத்தி ஜிந்தாவுக்கு தொல்லை கொடுத்தால் தொழிலை முடக்குவோம் என்றும் மிரட்டலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மிரட்டல் விடுத்தவர் தன்னை நிழல் உலக தாதா ரவி பூஜாரி என்று கூறிக் கொண்டுள்ளார். இது குறித்து மும்பை குற்றப்பிரிவு பொலிசார் வழக்கு பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். இது குறித்து விசாரணை அதிகாரி ஒருவர் கூறுகையில், நுஸ்லி வாடியாவின் செயலாளர்கள் 2 பேரிடமும், எங்களிடம் உள்ள ரவி பூஜாரியின் குரல் மாதிரியை போட்டு காண்பித்தோம்.

இது தங்களுக்கு மிரட்டல் விடுத்த குரலுடன் ஒத்து போவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். இதனால் மிரட்டல் விடுத்தது ரவி பூஜாரியாக தான் இருக்க வேண்டும் என்று நம்புகிறோம். மேலும், நுஸ்லி வாடியாவின் செயலாளர் களின் தொலைப்பேசி எண், ரவி பூஜா ரிக்கு எப்படி கிடைத்தது என்பது பற்றியும் விசாரித்து வருகிறோம் என்று தெரிவித்துள்ளார்.

## ஐரோப்பிய ஒன்றிய உடன்படிக்கையில் இந்த மாதம் கையெழுத்து - உக்ரைன் அதிபர்

(கீவ்)
பொருளாதார, வர்த்தக மேம்பாடுகளுக்காக கடந்த ஆண்டு இறுதியில் ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைவதாக இருந்த உக்ரைனின் முடிவு கடைசி நேரத்தில் அந்நாட்டு ரஷ்ய சார்பு அதிபரால் தடுத்து நிறுத்தப் பட்டது.



இதனைத் தொடர்ந்து அங்கு ஏற்பட்ட கலவரங்களில் இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் அதிபர் பதவி விலக நேரிட உக்ரைனின் கிழக்குப் பிராந்தியங்களில் ஒன்றான கிரிமியா ரஷ்யாவுடன் இணைந்தது. அமெரிக்கா உட்பட உலக நாடுகள் பலவும் இதனை எதிர்த்த போதும் மேலும் பல பகுதிகள் ரஷ்யாவுடன் இணைய வேண்டி போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றன.

இந்த நிலையில் உக்ரைனின் இடைக்கால பிரதமராகப் பதவி ஏற்ற ஆர்சனி யட்சென்யுக் கடந்த மார்ச் மாதம் 21-ம் தேதி பிரஸ்ஸல்சில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் அரசியல் குறித்த உடன்படிக்கை ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டார். இருப்பினும் உக்ரைனின் கிழக்குப் பகுதியில் உள்ள விவசாயிகளையும், எஃகுத் தொழிற்சாலைகளையும் நேரடி ஐரோப்பிய ஒன்றிய வர்த்தகத்தின் போட்டியிலிருந்து பாதுகாக்க உதவும் உள்நாட்டுத் தடைகளை விலக்க விரும்பிய உக்ரைன் பொருளாதார உடன்படிக்கையை ஏற்றுக்கொள்ளாமல் இருந்து வந்தது. தற்போது உக்ரைனின் அதிபர் பதவியை ஏற்றுக்கொண்டுள்ள பெட்ரோ போரோஷைங்கோ முக்கியத்துவம் வாய்ந்த ஐரோப்பிய ஒன்றிய உடன்படிக்கையின் வர்த்தகம் மற்றும் பொருளாதார உறவுகளுக்கான பகுதியில் வரும் 27-ம் தேதியன்று பிரஸ்ஸல்சில் நடைபெறும் கூட்டத்தில் கையெழுத்திட இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தில் காணப்படும் மந்த நிலையை சரிசெய்யும் வரையிலும், ரஷ்ய சார்பு கிளர்ச்சியாளர் களை முற்றிலும் அடக்கும் வரையிலும் முதலில் அவர் இந்த ஒப்பந்தங்களைத் தள்ளிப்போட விரும்பினார் என்று வால் ஸ்ட்ரீட் பத்திரிகை முன்னர் தகவல் தெரிவித்திருந்தது.

இந்த புதிய ஒப்பந்தமானது முன்னாள் சோவியத் யூனியனின் சில நாடுகளுடன் ரஷ்யா கொண்டுள்ள பொருளாதாரத் தொடர்புகளை முற்றிலும் அறுக்கும் என்று கூறப்படுகின்றது. அதற்கேற்ப உக்ரைன் அரசு இதில் கையெழுத்திட்டால் ரஷ்யா அதன்மீது வர்த்தகத் தடைகளை விதிக்கும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளது.

## பர்தா அணிந்த மாணவி கொடூர கொலை

(பிரித்தானியா)
பிரித்தானியாவில் பர்தா அணிந்த பெண் ஒருவரை கத்தியால் குத்தி கொலை செய்துள்ள சம்பவம் அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

பிரித்தானியாவின் கொல்செஸ்டர் நகரில் நகித் அல்மெனியா (31) என்ற பர்தா அணிந்த பெண்ணை 16 முறை கத்தியால் குத்திய கொடூர சம்பவம் அரங்கேறியுள்ளது. h.d பட்டப்படிப்பு படித்து வரும் அல்மெனியா, முஸ்லிம் பாரம்பரிய ஆடை அணிந்ததால் தான் தாக்கப்பட்டுள்ளார் என்று பொலிசார் சந்தேகிக்கப் படுகின்றனர்.
மேலும் இந்த கொலையில் 52 வயது நபர் ஒருவர் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டுள்ளார். கொல்செஸ்டர் நகரில் மார்ச் மாதம் இது போன்று மற்ற ஒரு நபர் கத்தியால் 100 முறை குத்தி கொலை செய்யப்பட்ட சம்பவம் நடந்தது குறிப்பிடத்தக்கது.

இதனை அடுத்து பொலிசார் பொது மக்களை பாதுகாப்புடன் இருக்கும் படியும், பொது இடங்களுக்கு தனியாக வரவேண்டாம் எனவும் எச்சரித்துள்ளனர். மேலும் அம்மெனியா கொலை செய்வதற்கு சற்றுமுன் அந்த தெருவில் நடந்து சென்ற காணொளி அங்குள்ள கடையின் பாதுகாப்பு கமெராவில் பதிவாகியுள்ளது.

## ஆசைக் கணவனை பானையில் வேகவைத்த பாட்டி

(பிரான்ஸ்)
பிரான்சில் 71 வயது மூதாட்டி ஒருவர், தனது கணவனை பானையில் வைத்து வேக வைத்துள்ளார். பிரான்சின் லாங்வே நகரில் மூதாட்டி (71) ஒருவர் தனது கணவருடன்(80) வசித்து வந்துள்ளார்.

இந்நிலையில், இந்த மூதாட்டி காய் கறிகள் வெட்டும் கத்தியை வைத்து தனது கணவரின் இதயம், மூக்கு மற்றும் உடற்பாகங்கள் என அனைத்தையும் நறுக்கி பானையில் போட்டு வேக வைத்துள்ளார்.

இவர், அதனை சாப்பிட்டாரா என்பது தெரியவில்லை, இதனை பக்கத்து வீட்டு நபர் பார்த்துவிட்டு பொலிசாருக்கு தகவல் தெரிவித்ததை தொடர்ந்து பொலிசார் குறித்த மூதாட்டியை கைது செய் துள்ளனர்.

தற்போது, இந்த மூதாட்டி [illegible] மருத்துவரிடம் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## ஐ.நா.வின் உதவிகள் அரசு அனுமதியில்லாமல் வழங்கப்படமாட்டாது -ஆசாத்

(ஐக்கிய நாடுகள்)
சிரியாவில் கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக நடைபெற்றுவரும் உள்நாட்டுப் போரில் பாதிக்கப்பட்டுள்ள லட்சக்கணக்கான மக்களுக்கு ஐ.நா மனிதாபிமான உதவிகளைச் செய்து வருகின்றது. ஆனால் இந்த உதவிகள் அனைத்தும் சிரியா அரசின் அனுமதி பெற்ற பின்னரே அங்குள்ள மக்களைச் சென்று சேருகின்றது.

இந்த நடைமுறையை ஐ.நா.வின் மனிதாபிமானத் தலைவர் வலேரி அமோஸ் தொடர்ந்து விமர்சித்து வருகின்றார். ஏனெனில், அரசின் அனுமதியில் விநியோகிக்கப்படும் உதவிகள் போராளிகள் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளில் சிக்கியுள்ள மக்களுக்குக் கிடைப்பதில்லை என்பது அவரின் குற்றச்சாட்டாகும்.

துருக்கியில் இருந்து ஜோர்டான் மூலமாகவும், ஈராக் மூலமாகவும் வரும் உதவிகள் பிரித்தளிக்கப்படும் பட்சத்தில் இதுவரை உதவி பெறாத 2 மில்லியன் மக்கள் இதன் பலனைப் பெறுவார்கள் என்று ஆஸ்திரேலியாவின் ஐ.நா தூதுவர் காரி குவின்லான் தெரிவிக்கின்றார்.

தற்போது அளிக்கப்படும் உதவிகளில் 90 சதவிகிதம் அரசு கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளிலேயே வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிடுகின்றார். கடந்த பிப்ரவரி மாதம் ஐ.நா கவுன்சிலின் 15 உறுப்பினர்களும் சிரியாவின் அனைத்துப் பகுதிகளுக்கும் இந்த மனிதாபிமான உதவிகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்று ஒரு வாக்கெடுப்பில் தீர்மானித்தனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சிகளின் சார்பில் பொது வேட்பாளர் நிறுத்தப்பட மாட்டார்

(கொழும்பு)
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க் கட்சிகளின் சார்பில் பொது வேட்பாளர்கள் நிறுத்தப்பட மாட்டார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொது வேட்பாளராக போட்டியிட மாதுளுவாவே சோபித தேரர் விருப்பம் வெளியிட்டுள்ள போதிலும் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு அமைப்பில் இணைந்துள்ள அரசியல் கட்சிகள் அதற்கு ஆதரவு வழங்காது என அந்த தகவல்கள் மேலும் குறிப்பிட்டன.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்க வேண்டும் என்ற கோஷத்துடன் எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் அண்மைய காலங்களில் பேச்சு வார்த்தைகளை நடத்தி வந்தனர்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, நிறைவேற்று அதிகாரத்தை ரத்துச் செய்வதாக அறிவித்தால், எதிர்க்கட்சிகளின் தேர்தல் பிரசாரம் பாதிக்கப்படும் என எதிர்க்கட்சிகளின் முக்கிய தலைவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதனால், ஐக்கிய தேசியக் கட்சி தனியான வேட்பாளரை நிறுத்த வேண்டும் என அந்த கட்சிகளின் தலைவர்கள் கருதுவதாக கூறப்படுகிறது. இதனிடையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொது வேட்பாளர் நிறுத்தப்படுவதை ஆதரிப்பதாக தெரிய வருகிறது.

அதேவேளை ஜே.வி.பி, இடதுசாரிகள் மற்றும் முற்போக்கு சக்திகளுடன் கூட்டணியை அமைக்க தயாராகி வருவதாகவும் பேசப்படுகிறது. இது குறித்த கருத்துக்களை பரிமாறிக் கொண்டுள்ளதாக ஜே.வி.பியுடன் பேச்சுவார்த்தைகளை நடத்திய அரசியல் கட்சிகளின் தலைவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

# அவுஸ்ரேலியாவில் மற்றுமொரு இலங்கைத் தமிழர் தமக்கு தாமே தீ மூட்டிக்கொள்ள முயற்சித்துள்ளார்

(கொழும்பு)
இலங்கைக்கு நாடு கடத்தப்படலாம் என்ற அச்சத்தில் மற்றும் ஒரு தமிழர் தமக்கு தாமே தீமூட்டிக்கொள்ள முயற்சித்துள்ளார். இந்த சம்பவம் அவுஸ்திரேலிய மெல்போர்ன் நகரில் இடம்பெற்றுள்ளது.

தமிழ் அகதிகள் சபையின் தகவலின்படி குறித்த அகதி தீமூட்டிக் கொண்ட உடனேயே வீட்டில் இருந்தோர் தீயை அணைத்து விட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து அவர் அம்புலன்ஸ் மூலம் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். இதன்போது அவருக்கு சிறிய காயங்கள் ஏற்பட்டன. இந்த நிலையில் அவர் இன்று மாலை வைத்தியசாலையில் இருந்து வெளியேறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கனவே லியோ சீமான்பிள்ளை என்ற 31 வயதான இலங்கை தமிழர் தமக்கு தாமே தீ மூட்டிக்கொண்ட நிலையில் மரணமானமை குறிப்பிடத்தக்கது. நேற்று தீ மூட்டிக்கொண்டவர் 40 வயதானவர் என்றும் இணை வீசாவில் அவுஸ்திரேலியாவில் தங்கியிருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாணந்துறையில் நோலிமிட் தீ தொடர்பில் வதந்திகளை நம்ப வேண்டாம்- பொலிஸ்

(கொழும்பு)
பாணந்துறையில் நோ லிமிட் நிறுவனத்தின் தீ பரவல் தொடர்பில் வதந்திகளை நம்ப வேண்டாம் என்று இலங்கையின் பொலிஸார் கோரியுள்ளனர். இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறைகள் இடம்பெற்று வரும் நிலையில் இன்று அதிகாலை பாணந்துறையில் உள்ள நோலிமிட் நிறுவனத்தில் தீப்பரவல் ஏற்பட்டது . எனினும் இது நாசகார வேலையா? அல்லது மின்சார ஒழுக்கினாலா? ஏற்பட்டது என்பது தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படுவதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். எனவே இந்த நிறுவனத்துக்கு தீ வைக்கப்பட்டதாக வெளியாகியுள்ள செய்தி தொடர்பில் சிங்கள மக்களும் முஸ்லிம் மக்களும் அவதானப் போக்கை கடைப்பிடிக்க வேண்டும் என்று பொலிஸார் கேட்டுள்ளனர்.

# எப்போது இந்த பாதை புனரமைக்கப்படும்

(கொழும்பு)
நாடு இன்று அபிவிருத்தியடைந்து வரும் வேளையில் நுவரெலியா மாவட்டத்தில் அபிவிருத்தி எந்தளவிற்கு மக்களின் தேவைக்கேற்ப இடம்பெறுகின்றன என்பதை அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பவர்கள் ஒரு முறை சிந்திக்க வேண்டிய காலம் வந்துவிட்டது.

அக்கரப்பத்தனை பிரதேசம் என்பது, பல அரசியல்வாதிகளை உருவாக்கிய பிரதேசமாகும். இப்பிரதேச மக்களிடமிருந்து வாக்குகளைப் பெற்று ஆட்சிப்பீடத்தில் அமர்ந்திருப்பவர்கள் இப்பிரதேச மக்களின் குறை நிறைகளை கேட்டறிகின்றார்களா? அக்கரப்பத்தனை மன்றாசி நகரத்திலிருந்து பிரதேச வைத்தியசாலைக்கு செல்லும் ஒரு கிலோமீற்றர் தூரம் கொண்ட பாதை செப்பனிடப்படாமல் சுமார் 5 வருடங்களாக இழுபறியான நிலையில் உள்ளது.

இவ்வைத்தியசாலையை அண்மித்த பகுதியில், ஊட்டுவள்ளி, குடமல்லி, நல்லதண்ணி, உருளேக்கர், சின்னதோட்டம், பச்சபங்களா, உருளவள்ளி, ராசாப்பத்தனை, பெரியநாகவத்தை, திஸ்பனை, சக்கரவத்தை, சீனிவத்தை, கிளாத்தோட்டம், அப்புச்சித்தோட்டம், கட்டமான்மோர்சன், கல்மதுரை, மன்ராசி, அல்டோரி, பெரிய மோர்சன், சட்டன், லெச்சிமி தோட்டம், கிளாபோர்க் போன்ற தோட்டங்களைச் சார்ந்த மக்களும், பசுமலை மற்றும் அக்கரப்பத்தனை நகர மக்களும், போபத்தலாவை மற்றும் மெனிக்பாலம் போன்ற கிராமங்களில் வசிக்கும் மக்களும் இவ் வைத்தியசாலைக்கே சிகிச்சைக்காக வருகின்றனர். இப்பகுதியில் அம்புலன்ஸ் வண்டி வசதிகள் குறைபாடு தொடர்ச்சியாக நிலவுவதால் தோட்ட லொறி மற்றும் வாடகை வாகனங்கிளிலேயே நோயாளர்களை ஏற்றிச்செல்ல வேண்டியதாக ளுள்ளது. பாதை மிகவும் மோசமாக இருப்பதால், வாகன உரிமையாளர்கள் இரவு நேரங்களில் செல்ல மறுப்புத் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நோயாளர்கள் மற்றும் தூரப் பிணித்தாய்மார்கள் மேலதிக சிகிச்சைகளுக்காக நுவரெலியா போன்ற வைத்தியசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்படும் போது, நோயாளர்கள் உட்பட வாகன சாரதிகளும் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர். மேலும் பிரதேசசபையில் உபதலைவராக இப்பிரதேசத்தைச் சார்ந்த ஒருவரும் மாகாண சபையில் 11 தமிழ் பிரதிநிதிகளும், பாராளுமன்றத்திலும் 7 உறுப்பினர்கள் இருக்கின்ற போதிலும் பெரும்பாலான மக்கள் பாவிக்கும் இப்பாதையை கண்டுகொள்ளாமல் இருப்பது வேதனைக்கு உரியதே.

# முஸ்லிம்களின் பொருளாதாரம் திட்டமிட்டு அழிக்கப்படுகிறது - முஸ்லிம் நாடுகளிடம் ஹக்கீம்



(கொழும்பு)
இலங்கையின் முஸ்லிம் வர்த்தகர்கள் மற்றும் அவர்களின் பொருளாதாரத்தை அழிக்கும் திட்டமிட்ட வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலை வரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் முஸ்லிம் நாடுகளிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

கொழும்பில் உள்ள முஸ்லிம் நாடுகளின் தூதரகங்கள் ஊடாக அவர் இந்த முறைப்பாட்டை செய்துள்ளார். அளுத்கம மற்றும் பேருவளை பகுதிகளில் அண்மையில் இடம்பெற்ற வன்முறை சம்பவங்கள் தொடர்பில் அமைச்சர் ஹக்கீம் முஸ்லிம் நாடுகளின் தூதுவர்களை சந்தித்து பேசிய போதே இந்த முறைப்பாட்டை செய்துள்ளார்.

# கூரை மீது ஏறி நோ லிமிட் நிறுவனத்திற்கு தீயிட்டனர் - மங்கள சமரவீர



(கொழும்பு)
பாணந்துறையில் உள்ள நோ லிமிட் ஆடை விற்பனை நிலையத்தின் கூரை மீது ஏறி வந்தவர்களே அந்த நிறுவனத்திற்கு தீயிட்டதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். பொலிஸார் கூறுவது போல் மின் ஒழுக்கு காரணமாக நோ லிமிட் நிறுவனத்தின் விற்பனை நிலையத்தில் தீ பரவவில்லை எனவும் இனந்தெரியாத நபர்கள் இந்த தீயை மூட்டியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். அத்துடன் நிறுவனத்திற்கு பின்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளையும் வன்முறையாளர்கள் தீயிட்டு கொளுத்தியுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மங்கள சமரவீர இன்று காலை, சம்பவம் இடம்பெற்ற நோ லிமிட் நிறுவனத்தின் விற்பனை நிலையத்திற்குச் சென்று பார்வையிட்டு, அதன் உரிமையாளருடன் உரையாடிய பின்னர், ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே இந்த தகவல்களை வெளியிட்டுள்ளார்.

# பயனுள்ள சேவையை வழங்குவதன் மூலம் உலகிற்கு சுபீட்சம் எனும் தொனிப் பொருளில் உள்ளூராட்சி வாரம்



(மட்டக்களப்பு)
வாகரை கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபையினால் "பயனுள்ள சேவையை வழங்குவதன் மூலம் உலகிற்கு சுபீட்சம்" என்னும் தொனிப் பொருளில் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு பல்வேறு சிறப்பு நிகழ்வுகளை நடாத்தி வருகின்றது.

அதற்கிணங்க வாகரை பிரதேச சபையின் செயற்பாடுகள் குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் வகையில் வாகரை மகா வித்தியாலயம், மற்றும் கதிரவெளி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் வீதி நாடகங்களை வெள்ளிக்கிழமை நடாத்தியது.

வாகரை மகா வித்தியாலயத்தில் வாகரை பிரதேச சபை செயலாளர் சி.இந்திரகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வாகரை பிரதேச செயலாளர் செல்வி.எஸ்.ஆர்.இராகுலநாயகி, வாகரை பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் வே.நவீதரன், வாகரை மகா வித்தியாலய அதிபர் எஸ்.அரசரெட்ணம், வாகரை பிரதேச சபை அபிவிருத்தி உத்தியோகத்தர் க.ஜெகதீஸ்வரன், பிரதேச சபை உத்தியோகத்தர்கள், கிராம பொதுமக்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

அத்தோடு கதிரவெளி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் வித்தியாலய அதிபர் நா.சந்திரலிங்கம் தலைமையில் வித்தியாலய முன்பாக வீதியோர நாடகம் நடைபெற்றது. இவ் நாடகத்தினை பிரதேச சபை அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி.ஜோசப் ஜோய் என்பவரின் நெறிப்படுத்தலில் நடைபெற்றிருந்தது.

அத்தோடு வாகரைப் பிரதேசத்தில் முதலாவதாக நெய்தல் சஞ்சிகை வெளியீடும், கலைஞர்கள் கௌரவிப்பும், நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி வாரத்தையொட்டி நடாத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் எதிர் வரும் 24ம் திகதி பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக வாகரை பிரதேச சபை செயலாளர் சி.இந்திரகுமார் தெரிவித்தார் யூன் மாதம் 16ம் திகதி முதல் யூன் மாதம் 22ம் திகதியுடன் உள்ளூராட்சி வாரம் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் நாடு நாமக்கலில் விபத்து, இலங்கையர் இருவர் பலி

(தமிழ்நாடு)
நாமக்கல் மாவட்டத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் இலங்கை அகதிகள் இருவர் உயிரிழந்துள்ளனர். நாமக்கல் மாவட்டம், எருமப்பட்டியிலிருந்து திருச்சி செல்லும் சாலையிலுள்ளது மேட்டுப்பட்டி இலங்கை அகதிகள் முகாம்.
இந்த முகாமைச் சேர்ந்த ஆனந்தன் மகன் 23வயதான நிஷாந்த் கனகரத்தினம்கனகராஜ் (25), குணசீலன் மகன் சுலக்சன் (24) ஆகிய மூவரும் கொல்லிமலை அடிவாரத்திலுள்ள வாழவந்தி என்ற இடத்திலுள்ள ஒரு கோழிப் பண்ணையில் பணியாற்றி வந்தனர்.
இரவு வேலை முடிந்துவிட்டு மூவரும் இரு சக்கர வாகனத்தில் முகாமுக்கு திரும்பிக் கொண்டிருந்தனர். அப்போது, திருச்சி சாலையில் இருந்து வடவத்தூர் செல்லும் சாலை அருகே வந்த போது, எதிரே மற்றொரு இலங்கை அகதியான அந்தோனி கண்ணன் (42) என்பவர் வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியது. இரு மோட்டார் சைக்கிளும் மோதிக்கொண்ட இந்த விபத்தில், நிஷாந்த் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்நாட்டு சிறப்பு முகாம்களில் தமிழர்களுக்கு தொடரும் அவலம்

(திருச்சி)
திருச்சி சிறப்புமுகாமில் ஈழ அகதி ஒருவர் தற் கொலைக்கு முயற்சி செய்த சம்பவம் பெரும் பர பரப்பை ஏற்படுத்தியுள்ளது. தேவரூபன் எனும் 27 வயது வாலிபர் கடந்த ஒரு வருடமாக திருச்சி சிறப்புமுகாமில் எந்தவிதமான வழக்குகளுமின்றி அடைக்கப்பட்டுள்ளார். விடுதலை எப்பொழுது என்றே தெரியாது இருந்து வந்த இவர் தன்னை விடுதலை செய்யக்கோரி கடந்த ஜுன் 10 ஆம் தேதி உண்ணாவிரதம் இருந்தார்.

அப்பொழுது காவல்துறையினர் இவரை மிரட்டி உண்ணாவிரதத்தை கைவிடச் செய்தனர். இத னால் ஏற்பட்ட மன உளைச்சலில் அவர் அதிகப் படியான தூக்க மாத்திரையை பயன்படுத்தி தற்கொலைக்கு முயற்சி செய்து மயங்கிச் சரிந்த அவரை திருச்சி அரசு மருத்துவமனையில் சேர்த் தனர்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு காப்பாற் றப்பட்ட அவர் மீண்டும் திருச்சி சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டார். அப்பொழுது தாசில்தாரை பார்க்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்த அவ ரை சிறப்பு முகாம் பாதுகாப்புக்கு பொறுப்பாக உள்ள நீலகண்டன் என்ற காவல்துறை ஆய் வாளர் கடுமையாக தாக்கி, தரக்குறைவான வார்த்தைகளால் திட்டியுள்ளார்.

அத்துடன் தேவரூபனின் கழுத்தை பிடித்து உள்ளே தள்ளிக் கதவை பூட்டி விட்டது மட்டு மல்லாமல் அகதி நாய்கள் என்றும் ஈழத்து நாய்கள் நான் சொல்வதை தான் கேட்க வேண் டும். தாசில்தார் யாரையும் அழைக்க முடியாது என்று கேவலமான வார்த்தைகளால் தரக்குறை வாகத் திட்டியுள்ளதுடன் தேவரூபனின் குடும்பத் தையும் தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளார். இதனால் விரத்தியடைந்த தேவரூபன் தனது கையை அறுத்துக் கொண்டு சாகப் போவதாக தெரிவித்துள்ளார். கழுத்தையும் அறுத்து தற்கொ லைக்கு முயன்ற போது அந்த காவல் ஆய்வாளர் தேவரூபனின் உயிரை காப்பாற்றுவதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்காமல் செத்தால் சாகட்டும் என்றும் சக முகாம் வாசிகள் தேவரூபனுக்கு எது வித முதலுதவிகளும் வழங்கககூடாது என்று மிரட் டி விட்டு அந்த இடத்தில் இருந்து அகன்று சென் று விட்டதாக தெரிகின்றது.

தேவரூபனின் நிலைமை கவலைக்கிடமானதை தொடர்ந்து முகாமில் இருந்த அகதிகள் அவர் வைத்திருந்த கத்தியை பறித்தெடுத்துள்ளதுடன் மேலதிகாரிகளுக்கு நேரடியாக தகவல் தெரிவித் துள்ளனர். மேலதிகாரிகள் வந்த பின்னரே தேவ ரூபன் வைத்தியசாலைக்கு தூக்கி செல்லப் பட்டுள்ளார்.

அதிகப்படியான இரத்த இழப்பின் காரணமாக தேவரூபன் முழுமையாக மயங்கிய நிலையில் மிகவும் ஆபத்தான நிலையிலேயே வைத்திய சாலைக்கு தூக்கி செல்லப்பட்டதாக தெரியவந் துள்ளது. தற்போது தேவரூபனுக்கு திருச்சி பொது மருத்துவமனை அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக மருத்துவர் கள் தெரிவித்துள்ளனர்.

# சர்வதேச விசாரணை குழு இறுதிப்படுத்தப்படவில்லை

(கொழும்பு)
இலங்கைக்கு எதிரான சர்வதேச விசாரணை, அதற்கான ஆலோசனை மற்றும் ஆதரவு நிபுணர்களை இறுதிப் படுத்தும் நடவடிக்கைகள் இன்னும் மேற்கொள்ளப் படவில்லை என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை தெரிவித்துள்ளது.

பேரவையின் பேச்சாளர் ரூபட் கொல்வில்லி இந்த தகவலை வெளியிட்டுள்ளார். இலங்கையின் ஊடகம் ஒன றுக்கு தகவல் வழங்கியுள்ள அவர், இந்த நிபுணர் குழு இறுதிப்படுத்தப்பட்டவுடன் அது தொடர்பில் உத்தி யோகபூர்வ அறிவித்தல் விடுக்கப்படும் என்று ரூபர்ட் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை விசாரணைக்கென உரிய வழிகாட்டிகள் மற்றும் சுயாதீனமான உறுதிப்படுத்துதல் மற்றும் விசார ணையின் இறைமை போன்ற விடயங்கள் கருத்திற் கொள் ளப்படவுள்ளதாகவும் ரூபர்ட் குறிப்பிட்டுள்ளார். குறித்த குழு 12 பேரை உள்ளடக்கியிருக்கும். இந்தக் குழுவின் இணைப்பாளராக சான்ட்ரா பெய்டாஸ் என்ற 20 வருட அனுபவம் கொண்ட மனித உரிமைகள் நிபுணர் கடமை யாற்றுவார்.

இந்தக்குழு 2014 ஜுன் நடுப்பகுதி முதல் 2015 ஏப்ரல் நடுப்பகுதி வரையில் தமது விசாரணை வரையறையை கொண்டிருக்கும் என்றும் ரூபர்ட் குறிப்பிட்டார். இதே வேளை குழுவின் இறுதியறிக்கை 2015 ஆம் ஆண்டு மார்ச்சில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரி மைகள் பேரவையின் அமர்வில் வெளியிடப்படும் என்றும் ரூபர்ட் தெரிவித்தார்.

# மனிதக் கடத்தல் தொடர்பான பட்டியலில் இலங்கையும் உள்ளடக்கம்

(கொழும்பு)
அமெரிக்காவின் மனிதக் கடத்தல் டையர் 2 பட்டியலில் இலங்கையும் உள்ளடக்கப் பட்டுள்ளது. அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தினால் இந்த பட்டியல் நேற்று வெளியிடப்பட்டது. வியட்நாம் பாது காப்பு சட்டத்தின் கீழ் சாட்சி பாதுகாப்பு மற்றும் புறக்கணிப்புகள் தொடர்பாக உரிய நடைமுறைகளை கொண்டிராத நாடுகளை இந்த பட்டியல் கொண்டி ருக்கிறது.

இந்நிலையில் குறித்த நாடுகள் மனிதக் கடத்தலை தடுக்கக் கூடிவாறான நட வடிக்கைகளை எதிர்காலத்தில் முன் னெடுக்க வேண்டும் என்று அமெரிக்க அறிக்கையில் கோரப்பட்டுள்ளது. எனவே இலங்கையை பொறுத்தவரை, மனிதக் கடத்தல் நடவடிக்கைகள் குறித்து அந்த நாடு உரிய விசாரணைகளை நடத்த வேண்டும். அந்த நடவடிக்கைகளை முன்னேற்றமடைய செய்ய வேண்டும்.

அத்துடன் மனித கடத்தல்களை தடுக்கும் வழிகளை ஆராய வேண்டும் என்றும் அமெரிக்கா கோரியுள்ளது. இதன்போது பாதிக்கப்பட்டோரை பாதுகாக்கும் நடை முறைகள் பின்பற்றப்பட வேண்டும். அதே நேரம் மனிதக்கடத்தலுக்கு உதவி செய் யும் அரசாங்க அதிகாரிகள் இனங் காணப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும்.

இதேவேளை 2014 ஆம் ஆண்டு மனிதக் கடத்தல் தொடர்பான அமெரிக்க அறிக் கையின்படி, இலங்கையின் ஆண்கள் பெண்கள் மற்றும் சிறுவர்கள் போன்றோர் தொழிலாளர் என்ற வகுதிக்காகவும் பாலி யல் தொழிலுக்காகவும் கடத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாலுறவு தொடர்பிலான நோயாளர்கள் அதிகரிப்பு

(கொழும்பு)
பாலுறவு தொடர்பிலான நோயாளர்க ளின் எண்ணிக்கை உயர்வடைந்துள் ளதாக பாலுறவு நோய் தடுப்புப் பிரிவு மற்றும் எச்.ஐ.வீ. தடுப்பு மத்திய நிலை யம் அறிவித்துள்ளது.

சிபிலிஸ் என்னும் நோயே அதிகளவில் ஏற்படுவதாக பாலுறவு நோய்த் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் டொக்டர் சிசிர லியனகே தெரிவித்துள்ளார். கர்ப்பிணி தாய்மாரின் இரத்த பரிசோதனையின் போது இந்தத் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. கடந்த காலங்களை விடவும் 2013ம் ஆண்டில் சிபிலிஸ் என்னும் நோயினால் பாதிக்கப்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களின் எண்ணிக் கை இரட்டிப்பாக உயர்வடைந்துள் ளது. இதனால் சகல கர்ப்பிணித் தாய் மார்களையும் பாலுறவு தொடர்பிலான நோய்கள் தொடர்பில் சோதனையிட திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

# பாணந்துறை நோலிமிட் ஆடை நிறுவனம் தீக்கிரை பொதுபலசேனா வெறிச்செயல்



(கொழும்பு)
இலங்கையின் முன்னணி ஆடை விற் பனை நிலையம் நோலிமிட்டின் பாணந் துறை காட்சியறை சற்று முன் தீக் கிரையாக்கப்பட்டுள்ளது. இலங்கை யின் முன்னணி ஆடை விற்பனை காட் சியறைகளில் நோலிமிட் நிறுவனம் வெளிநாடுகளிலும் புகழ்பெற்றது.

இதன் உரிமையாளர் ஒரு முஸ்லிம் என்ற போதிலும், சுமார் இரண்டாயிரம் சிங்களவர்கள் மற்றும், ஆயிரத்து ஐநூ றுக்கும் மேற்பட்ட தமிழர்களும் இந்த நிறுவனத்தின் மூலம் வருமானத்தைப் பெற்று வந்துள்ளனர்.

இந்நிறுவனம் சுமார் ஐயாயிரம் ஊழி யர்களைக் கொண்டதும், நாட்டின் முக்கிய நகரங்களில் பல கிளை களை கொண்டதுமாகும். இந்நிலை யில் பாணந்துறை நகரின் அரச மருத்துவமனை அருகில் அமைந் திருந்த நோலிமிட் நிறுவனத்தின் காட்சியறை சற்று முன் தீக்கிரையாக் கப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் ஊழியர்கள் சிலர் உள் ளே தங்கியிருந்த நிலையில், பொது பல சேனா தீவிரவாதிகள் வெளி யிலிருந்து நோலிமிட் காட்சியறைக்குத் தீவைத்துள்ளார்கள். தீ வேகமாகப் பர விய நிலையில், உள்ளே தங்கியிருந்த ஊழியர்கள் ஏழு பேர் பெரும் சிரமத் தின் மத்தியில் உயிர் தப்பியுள்ளனர். ஏனைய ஊழியர்களின் நிலை குறித்து தகவல்கள் தெரியவில்லை.

இதற்கிடையே கொழுந்து விட்டு எரிந் து கொண்டிருக்கும் தீயை அணைப் பதற்காக கொழும்பு உள்ளிட்ட இடங் களிலிருந்து தீயணைப்பு வண்டிகள் தருவிக்கப்பட்டுள்ளதாகவும் அறியக் கிடைத்துள்ளது.

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மகிந்த அழித்து வருகிறார் பொன்சேகா



(கொழும்பு)
பண்டாரநாயக்கவினர் அர்ப்பணிப்புகளை மேற்கொண்டு கட்டியெழுப்பிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை இன்றைய ஆட்சி யாளர்களான மகிந்த ராஜபக்ஷவினர் அழித்து வருகின்றனர் என ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பதுளையில் அண்மையில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை கூறி யுள்ளார். எத்தனை தேர்தல்களை நடத் தினாலும் அது நீதியான முறை யில் நடத்தப்படாவிட்டால் அதில் பயனில்லை எனவும் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல்களை நடத்தும் போது சகல கட்சிகளும் சுதந்திரமாக ஊடகங்களை பயன்படுத்தி, பிர சாரங்களை மேற்கொள்ள இடம ளிக்கப்பட வேண்டும். அரச ஊட கங்களை அரசாங்கம் அநீதி யான முறையில் பயன்படுத்தி வருகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை அழித்து வரும் இன்றைய ஆட்சியாளர்கள், பிரச் சினைகளை ஏற்படுத்தி அதிகாரத்தை தக்கவைக்க முயற்சித்து வருகின்றனர் எனவும் பொன்சேகா மேலும் தெரி வித்துள்ளார்.

# ரிசானா நபீக்கின் பெற்றோருக்கு வழங்கப்பட்ட போலி காசோலையை

(கொழும்பு)
சவூதி அரேபியாவில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டு உயிரிழந்த ரிசானா நபீக்கின் பெற்றோருக்கு, அமைச்சர் ஒருவர் வழங்கிய காசோலை போலி யானது என தெரியவந்துள்ளது.

அரசாங்கத்தின் அமைச்சர் ஒருவர் மூன்று லட்சம் ரூபா பெறுதியான காசோலை ஒன்றை வழங்கியதாகவும் அது போலி யானது என ரிசானாவின் தந்தையான மொஹமட் சுல்தான் நபீக் தெரிவித்துள்ளார். அதேவேளை தமது மகளின் பெயரை பயன்படுத்தி சில நபர்கள் பணத்தை சம்பாதித்து வருவ தாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இடம்பெறும் இன...** நிலைமைகள் இ.றுதியில் அண்மையில் இனவாத வன்முறையாக வெடித்தன.

லண்டனில் நேற்று நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பெரும் எண்ணிக்கையிலான முஸ்லிம்களும், தமிழர்களும் ,சிங்களவர்களும் கலந்து கொண்டனர். சகல இனங்களுக்கு சொந்தமான இலங்கையில் அனைவரும் ஒன்றிணைந்து இன மற்றும் மத ரீதியான அடிப்படைவாதத்திற்கு எதிராக குரல் கொடுக்க பிரித்தானியாவில் வாழும் இலங்கையர்களுக்கு கிடைத்த இந்த சந்தர்ப்பம் மகந்தான சந்தர்ப்பம் என சம உரிமை இயக்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கம் இனவாத வன்முறைகளை துாண்டும் செயற்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காதது, அவற்றை மறைமுகமாக ஆதரிப்பதாகவும் எனவும் அரசாங்கத்தின் இந்த செயற்பாடுகளை வன்மையாக கண்டிப்பதாகவும் 'ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.

---

**அவுஸ்திரேலியாவில்..** ப்பங்கள மறுபரிசீலனை செய்யும்படியும் உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

மேலும் தற்போது அரசாங்கத்தால் ஒரு வருடத்தில் கொடுக்கப்படும் பாதுகாப்பு வீசாக்களின் மொத்த எண்ணிக்கையை மட்டுப்படுத்தும் சட்டத்தையும் உயர் நீதிமன்றம் ரத்து செய்துள்ளது.

உயர் நீதிமன்றமானது அமைச்சருக்கு இந்த 90 நாள் கால அவகாசத்தின் நிமிர்த்தம் வழங்கக்கூடிய பாதுகாப்பு விசாக்களின் மொத்த எண்ணிக்கையை மட்டுப்படுத் தும் அதிகாரமும் கிடையாது என்தையும் இந்த தீர்ப்பில் குறிப்பிடப்படுள்ளது.

குறிப்பாக கடந்த மதங்களில் செனட் சபையிலும் தீர்மானங்கள் பல எடுக்கப்பட்டும் இது தொடர்பாக பல கருத்துக்களும் விமர்சனங்களும் கிளம்பியிருந்தன.

ஆனால் உயர் நீதிமன்ற வழக்குகளுக்கு செல்லாமல் குடிவரவு அமைச்சர் மொரிசன் நாட்ககளை தள்ளிப்போட்டமையே இதற்கான காரணமாக இருந்தது.

---

**குருப் பெயர்ச்சியைத...**இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் பதவியேற்பு வைபவத்தில் கலந்து கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அங்கு வந்திருந்த மாலைதீவு ஜனாதிபதி யாமின் அப்துல் கையூமை சந்தித்துடன் மாலைதீவுக்கு விஜயம் செய்யும் எண்ணத்தை வெளியிட்டிருந்தார்.

2010 ஆம் ஆண்டு மொஹமட் நசீட் ஜனாதிபதியாக இருந்த நேரத்தில் மகிந்த ராஜபக்ஷ மாலைதீவுக்கு விஜயம் செய்தார்.மாலைதீவு அரசாங்கத்திற்கும் எதிர்க்கட்சிக்கும் இடையில் ஏற்பட்ட பிணக்கை தீர்ப்பதற்கான நடுநிலையாளராக செயற்படும் தன்னார்வ நோக்கத்தில் ஜனாதிபதி, அங்கு சென்றிருந்தார்.

அதேவேளை மாலைதீவின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்று கொண்ட யாமீன் அப்துல் கையூம் கடந்த ஜனவரி மாதம் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார்.

கல்வி, மருத்துவ தேவைகள் மற்றும் வர்த்தக செயற்பாடுகளுக்காக இலங்கையில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாலைதீவு பிரஜைகள் வசித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

எவ்வாறாயினும் அண்மையில் ஏற்பட்ட குரு பெயர்ச்சி ஜனாதிபதிக்கு கெடுதியான பலன்களை கொடுக்கும் என்பதால், நாட்டில் இருந்து வெளியேறி சில நாட்கள் வெளிநாட்டில் தங்கியிருக்குமாறு அவரது சோதிடர்கள் ஆலோசனை வழங்கியிருந்தாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

குரு பெயர்ச்சியினால் ஏற்படும் பாதகங்களை தவிர்ப்பதற்காக 100 பேருக்கு தானம் வழங்கி விட்டு, மாலைதீவு நாட்டுக்காவது சென்று சில நாட்கள் தங்கியிருக்குமாறு சோதிடர்கள் ஜனாதிபதியிடம் ஆலோசனை வழங்கியதாக கூறப்பட்டது.

இதனடிடையிலேயே ஜனாதிபதி நேற்று கண்டியில் தாய்மாருக்கு தானம் வழங்கியதாக சிங்கள இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

---

**முஸ்லீம்களுக்கு எதிரான....** காவல் துறையின் துணையோடே இத்தாக்குதல்களை நடத்தியுள்ளது.சிங்கள புத்த பிக்குகள் தலைமையில் செயல்படும் இந்த காடையர் அமைப் புக்கு மகிந்த இராசபக்கசேயும், கோத்தபய இராசபக்கசேயும் வெளிப்ப டையாக ஆதரவு அளித்ததைத் தொடந்தே இவர்களது இன வெறியாட்டம் தீவிரம் பெற்றுள்ளது. இலங்கையில் அரசு வழிப்பட்டு வேகமாக வளர்ந்து வரும் சிங்கள பௌத்த பாசிசத்தின் உடன் பிறந்த விளைவு இது. தமிழ் முஸ்லீம்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இந்த இன வெறித் தாக்குதலை தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது. சிங்கள பௌத்த பாசிச கும்ப லை இனப் படுகொலை தொடர்பாக பன்னாட்டு விசாரணைக்கு உட்படுத்தாமல் சர்வ தேச சமூகம் காலம் கடத்துவதால் ஊக்கம் பெற்றுள்ள இன வெறி கும்பல் அடுத்தடுத்து இன அழிப்பு நடவடிக் கைகளில் முனைப்புடன் இறங்குகிறது.

சிங்கள பவுத்த பேரினவாத அடாவடிகள் அனைத்துக்கும் இந்திய அரசு பக்க பலமாக திகழ்வதால் எந்த கேள்வி முறையும் அற்று இந்த அநீதி தொடர்கிறது.இலங்கை அரசின் துணையோடு சிங்கள் புத்த வெறியர்கள் தமிழ் முஸ்லீம் களுக்கு எதிராக நடத்தும் இன வெறித் தாக்குதல்களை இப்போதாவது இந்திய அரசு வெளிப்படையாகக் கண்டிப்பதுடன், இந்த வெறியாட்டம் மேலும் தொடராமல் தடுத்து நிறுத்த முன்வரவேண்டும் என த.தே.பொ.க. சார்பில் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன்.

---

**இஸ்லாமிய நாடுகள்..** எச்சரிக்கை விடுத்தள்ளன.

இராஜதந்திர காரியாலங்கள் ஊடாக இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

வீசா முறைமை கடுமையாக்கப்பட்டால் தற்போது வெளிநாடுகளில் பணியாற்றி வரும் பெரும் எண்ணிக்கையிலான இலங்கையர்களே பாதிக்கப்படுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.எனினும்,இவ்வாறான எச்சரிக்கைகள் எதுவும் தமக்கு விடுக்கப்பட்டதாக தெரியவில்லை என வெளிவிவகார அமைச்சு அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

லட்சக் கணக்கான இலங்கையர்கள் மத்திய கிழக்கு நாடுகளில் பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.இவ்வாறான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில் பாணந்துறையில் அமைந்துள்ள நோ லிமிட் ஆடை வர்த்தக நிலையம் இன்று அதிகாலை தாக்கப்பட்டுள்ளது.

பாணந்துறையில் பிரபல ஆடையகம் தீக்கிரையான சம்பவம் தொடர்பில் ஆராய்வதற்காக முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் அங்கு விஜயம் செய்திருந்தார்.

இந்நிலையில் அவர் உடனடியாக ஜனாதிபதியுடன் தொடர்பினை மேற்கொண்டு அவசரமாக சந்திக்க வேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்தியுள்ளார்.

தான் பதுளைக்கான விஜயமொன்றை மேற்கொண்டிருப்பதாக தெரிவித்துள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அங்கு சந்திப்பினை மேற்கொள்ள இணங்கியுள்ளார்.

இதனையடுத்து விசேட ஹெலி மூலம் முஸ்லிம் அமைச்சர்கள் பதுளைக்குப் பயணமாகி யுள்ளதுடன் அங்கு சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

---

**எங்களை இனவாதி என்றே...** தெரிவித்த மதவாதக் கருத்துக்களே வன்முறைகளைத் தூண்டி யதாகவும், அவரது பேரணியை அதி காரிகள் தடுக்காமல் விட்டமை தவறு என்றும் விமர்சனங்கள் வெளியாகியிருந் தன.

இந்த சூழ்நிலையில், ஞானசார தேரரிடம் கேள்வி எழுப்பியபோது,

இந்த நாட்டில் கடும்போக்கு தீவிரவாத, அடிப்படை வாத, இனவாத குழுக்கள் இயங்குகின்றன என்பதை சுட்டிக்காட்டும் எங்களை இனவாதி என்றால் பரவாயில்லை. எங்களை இனவாதி என்றே வைத்துக்கொள்ளுங்கள் என்று தான் நான் கூறினேன் என்றார் ஞானசார தேரர்.

இந்த தீவிரவாதக் குழுக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்காவிட்டால், ஜனநாயக வழிமுறையில் முஸ்லிம் வியாபார நிலையங்களை புறக்கணிக்குமாறு மக்களை கேட்க வேண்டிய நிலை ஏற்படலாம் என்று தான் கூறினேன். அப்படி மக்கள் புறக்கணித்தால் பேருவளை மற்றும் அளுத்கமையில் உள்ள கடைகளுக்கு அதோ கதிதான் என்றும் நாங்கள் கூறினோம் என்றும் கூறினார் அவர். தான் கூறிய கருத்தை, முஸ்லிம் கடைகளைத் தாக்கும்படி கூறியதாக அர்த்தம் கொள்ளக்கூடாது என்றும் ஞானசார தேரர் கூறினார்.

முன்னதாக அளுத்கமையில் பௌத்த பிக்கு ஒருவர் தாக்கப்பட்டதாக வெளியான சம்பவத்தை தொடர்ந்து இரண்டு சமூகங்களுக்கும் இடையே மோதல் வெடிக்கும் சூழ்நிலை நிலவியதாகவும், அதனைத் தடுக்கும் விதத்தில் பௌத்த மக்களுக்கு தெளிவூட்டும் விதமாகவே நகரில் பெரிய அளவில் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டதாகவும் ஞானசார தேரர் கூறினார்.

இரண்டு சமூகங்களுக்கும் இடையில் பிரச்சனை வெடிக்கும் என்ற நிலை இருந்தால், அந்தக் கூட்டத்தை நடத்தி மேலும் மோதலை வளர்க்காமல், தனிப்பட்ட ரீதியில் சமூகத் தலைவர்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தியிருக்கலாம் அல்லவா என்று வினவிய போது,

நீங்கள் சொல்லுகின்ற எல்லாப் பேச்சுவார்த்தைகளும் நடந்துதான் இருந்தன. பள்ளிவாசல்களில் நூற்றுக் கணக்கில், ஆயிரக்கணக்கில் முஸ்லிம் இளைஞர்கள் கூடியிருந்த மை பற்றி பௌத்த அமைப்புகள் மீது விரல் நீட்டும் எவரும் பேசுவதி ல்லையே. அதுபற்றி யாரும் பேசுவதில்லை. எங்கள் மீது மட்டும் குற்றம் சாட்ட வேண்டாம் என்றார் பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலபொடஅத்தே ஞானசார தேரர்.

---

**வன்முறைகளை விசாரிக்க..** இடம்பெற்ற மோதலில் இருவர் உயிரிழந்ததாகவும் 44 பேர் வரையில் காயமடைந்ததாகவும் பிரதமர் டி. எம். ஜயரத்ண பாராளுமன்றில் தெரிவித்திருந்தார்.

---

**மீண்டும் ஒரு கறுப்பு...**நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் எனவும் இதனை செய்யத்தவறின் எமது நாடு தீ மலையாக மாறும் எனவும் சஜித் குறிப்பிட்டார். மீண்டும் ஒரு கறுப்பு ஜுலையை நாட்டில் ஏற்படுத்தவேண்டிய அவசியம் இல்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இன, மத பேதம் இன்றி சகல பிரஜைகளும் சகோதரத்துவத்துடன் வாழ வேண்டும் என சஜித் குறிப்பிட்டார்.

---

# ஆக்கிரமிப்பு அடையாள அரசியலினூடாக நல்லிணக்க்த்தினை ஏற்படுத்தமுடியாது

சமூகத்தில் தேசிய இணக்கப்பாட்டை பெரும்பான்மையினரதோ அல்லது ஆக்கிரமிப்பு அடையாள அரசியலின்லோ உருவாக்க முடியாது என தேசிய அரசாங்கமாக சுதந்திரம் பெற்று அறுபத்தாறு ஆண்டுகள் கடந்த பின்னரும் நாம் இன்னமும் கற்றுக் கொள்ளாமல் உள்ளோம் என வெளிக்கிழமை கருத்துக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

நாட்டில் பரவலாக முஸ்லிம் சமூகத்திற்கு எதிராக மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் தொடர்பில் புத்திஜீவிகளையும் செயற்பாட்டாளர்களையும் கொண்டு இயங்கும் வெள்ளிக்கிழமை கருத்துக்களமானது அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அவ் அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ் அறிக்கையின் முழுமை வருமாறு,

ஜுன் 14-16ம் திகதிகளில் அளுத்கம, பேருவெல மற்றும் மற்றைய பிரதேசங்களில் நடைபெற்ற வன்முறைகள் குறித்து வெள்ளிக் கருத்துக்களம் திகைப்படைந்துள்ளது. மூன்று மரணங்கள், கிட்டத்தட்ட 80 பேர் காயமடைந்ததோடு வீடுகளுக்கும் கடைகளுக்கும் பாரிய சேதங்கள் மேற்கொள்ளப்பட்டதாக சர்வதேச மற்றும் தனியார் ஊடகங்கள் அறிக்கை செய்தது நாட்டில் அச்சத்தையும் பதட்டத்தையும் உருவாக்கியுள்ளது. நாம் இந்த வன்முறைச் செயல்களை கண்டிப்பதோடு இந்தச் செயல்களை புரிந்தவர்கள் மீது சட்டம் தமது நடைமுறையை செயற்படுத்த வேண்டுமென்று அழைப்பு விடுக்கின்றோம். பாதிக்கப்பட்ட இடங்களில் ஊரடங்குச் சட்டம் பிரகடனப் படுத்தப்பட்டதை நாம் வரவேற்பதோடு அனைத்துத் தரப்பினரின் கட்டுப்பாட்டிற்கும் அழைப்பு விடுக்கின்றோம். எமது கடந்த வளமான வரலாற்றிலிருந்து மரபுவழியாக வந்த பல்லினச் சமூகத்தில் தேசிய இணக்கப்பாட்டை பெரும்பான்மையினரதோ அல்லது ஆக்கிரமிப்பு அடையாள அரசியலினாலோ உருவாக்க முடியாது.

என தேசிய அரசாங்கமாக சுதந்திரம் பெற்று அறுபத்தாறு ஆண்டுகள் கடந்த பின்னரும் நாம் இன்னமும் கற்றுக் கொள்ளாமல் உள்ளோம். வாழ்வின் குடியரசு வழியினைக் கொண்டுள்ள நாம் செலுத்த வேண்டிய விலையாக தீவிரவாத மற்றும் பகட்டாரவாரமாக தோன்றினும், வெறுப்பைப் போதித்து வன்முறையை அறிவுறுத்தும், திருப்பணியாளர்களாக இருந்தாலும் சரி பொது நிலையினராக இருந்தாலும் சரி, நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்டவர்கள் மீது தடைகள் விதிக்கப்படல் வேண்டுமென்று சட்டவாட்சி கோரிக்கை விடுக்கின்றது. அத்தகைய நிறுவனங்களும் தனிப்பட்டவர்களும் சக குடிமக்களுக்கு தாக்குதலை தூண்டுவிக்கும் கூட்டங்களை நடாத்த அனுமதி வழங்கப்படக் கூடாது. எமது "உள்ளக விவகாரங்கள்" மீது சர்வ தேச விசாரணையை கண்டித்து கூப்பாடு போடும் சக்திகளின் நடவடிக்கைகளே அத்தகைய விசாரணைகளை தவிர்க்க முடியாதவையாக்கியும் நியாயமாக்கியும் காட்டுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலையில் முட்டிய விவகாரம் பெபெவுக்கு ஒரு போட்டியில் விளையாட தடை



தாமஸ் முல்லரை தலையால் முட்டிய காரணத்திற்காக போர்த்துகல் வீரர் பெபெவுக்கு ஒரு போட்டியில் விளையாட தடைவிதிக்கப்பட்டுள்ளது.

உலகக்கிண்ண கால்பந்து போட்டியில் சால்வடோரில் நடந்த ஜி பிரிவு லீக் ஆட்டத்தில் 3 முறை சாம்பியனான ஜெர்மனி அணி 4-0 என்ற கோல் கணக்கில் போரத்துகல்லை வீழ்த்தியது.

இந்த ஆட்டத்தில் ஜெர்மனியின் நட்சத்திர ஆட்டக்காரர் தாமஸ் முல்லர் ஹாட்ரிக் கோல்கள் அடித்து சாதனை படைத்து அணியின் வெற்றியில் முக்கிய பங்கு வகித்தார்.

இந்த ஆட்டத்தில் 37வது நிமிடத்தில் தாமஸ் முல்லர்-போரத்துகல் பின்கள வீரர் பெபெ இடையிலான மோதல் ஆட்டத்தில் பரபரப்பை பற்ற வைத்தது.

பந்தை தன்வசப்படுத்த இருவரும் துள்ளி தலையால் முட்ட முயற்சித்த போது பெபெ தனது முழங்கையால் தாமஸ் முல்லரை இடித்து கீழே தள்ளினார்.

கீழே விழுந்ததும் முகத்தை தடவிய படி தாமஸ் முல்லர் ஏதோ கூற உடனடியாக பெபெ தனது தலையால் தாமஸ் முல்லரின் தலையில் பலமாக முட்டினார்.

இதனால் பெபெவுக்கு சிவப்பு அட்டை காண்பித்து நடுவர் வெளியேற்றினார். இந்தக் காரணத்தால் அவருக்கு ஒரு போட்டியில் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் 10 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டது.

## எனக்கு இங்கிலாந்து ராணியின் முத்தம் வேண்டும்: மரியோ பலோடெலி



இத்தாலி அணி தொடக்க ஆட்டத்தில் இங்கிலாந்தை வீழ்த்தியது. நேற்று முன் திம் நடந்த ஆட்டத்தில் கோஸ்டாரிகா வெற்றி பெற்றால் இங்கிலாந்து போட்டியில் இருந்து வெளியேற்றப்படும்.

மேலும் இத்தாலி வெற்றி பெற்றால் இங்கிலாந்து அணிக்கு சிறிது வாய்ப்பு இருக்கும். இதனால் இத்தாலியின் வெற்றியில் தான் இங்கிலாந்தின் அடுத்த க்கட்டம் அடங்கியுள்ளது.

நேற்றய ஆட்டத்தில் கோஸ்டாரிகாவை வீழ்த்தினால் தமக்கு இங்கிலாந்து ராணியின் முத்தம் தேவை என்று இத்தாலி வீரர் மரியோ பலோடெலி கூறியுள்ளார்.
உலகக்கிண்ண கால்பந்தில் நேற்று இரவு நடந்த் ஆட்டத்தில் இத்தாலி-கோஸ்டாரிகா அணிகள் மோதின.

இந்நிலையில் இத்தாலியின் நட்சத்திர வீரர்களில் ஒருவரான மரியோ பலோடெலி, தமது டுவிட்டர் பக்கத்தில் இன்று இத்தாலி வென்றுவிட்டால், இங்கிலாந்து ராணியிடம் இருந்து எனக்கு முத்தம் வேண்டும் என்று கூறியுள்ளார்.

## போர்த்துகல் தூண் சாய்ந்து விட்டதா? ரொனால்டோ விலகல்?

போர்த்துகல் அணியின் நட்சத்திர ஆட்டக்காரர் ரொனால்டோ காயம் காரணமாக மீதமுள்ள போட்டிகளில் பங்கேற்க மாட்டார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
உலகக்கிண்ண கால்பந்து தொடருக்கு முன்னதாகவே ரொனால்டோ முழங்கால் வலியுடன் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார்.

உலகக்கிண்ணத்திற்கு முன்பாகவே, முழங்கால் வலியுடன் ரொனால்டோ விளையாடக் கூடாது. அப்படி விளையாடினால் அவரது எதிர்காலமே கேள்விக்குறியாகி விடும் என்று அவரது டாக்டர் எச்சரித்திருந்ததாக கூறப்படுகிறது.

போர்த்துகலின் முதல் போட்டியான ஜெர்மனியுடனான முதல் போட்டியின் போது முழு ஆட்டத்திலும் அவர் ஆடினார். அப்போட்டியில், போர்ச்சுகல் அணி 0-4 என்ற கோல் கணக்கில் படு தோல்வியைச் சந்தித்தது.



இந்நிலையில் அடுத்த போட்டிக்காக பயிற்சியின் போது பாதியிலேயே ரொனால்டோ வெளியேறி விட்டார். அவரது இடது முழங்காலில் ஐஸ் பேக் வைக்கப்பட்டிருந்தது.

இப்படி பயிற்சியிலிருந்து பாதியில் ரொனால்டோ விலகியதால், அவர் தொடர்ந்து ஆட மாட்டார் என்று செய்திகள் பரவி வருகின்றன. ஆனால் இது குறித்து போர்த்துகல் அணி நிர்வாகம் எதையும் உறுதிப்படுத்தவில்லை.

## ஒலித்த தேசிய கீதம் உணர்ச்சியில் கண்ணீர் விட்ட நெய்மர்



உலகக்கிண்ண போட்டி தொடங்கும் முன் ஒலித்த பிரேசில் நாட்டு தேசிய கீதத்தை பாடிய நெய்மர் உணர்ச்சியில் அழத்தொடங்கினார்.
போட்டிகள் தொடங்கும் முன் அவர்கள் நாட்டு தேசிய கீதத்தை வீரர்கள் பாடுவது வழக்கம். இந்நிலையில் மெக்ஸ்சிகோ- பிரேசில் போட்டியின் போது பிரேசில் அணி வீரர்கள் வரிசையில் நின்று அவர்களின் தேசிய கீதத்தை பாடத் தொடங்கினர்.

பிரேசிலின் தேசிய கீதப்பாடல் மிகப பெரியது. ஆனால் பிபா அமைப்பு 90 வினாடிகள் மட்டுமே பாடல் ஒலிக்க அனுமதிவழங்கியுள்ளது. இதைத்தொடர்ந்து அரங கமே பாடலை பாடத தொடங்கியது. கமெரா மைதானத்தை வட்டமிடத் தொடங்கியது. வீரர்கள் முகங்களை நோக்கிய கமெராவில் நெய்மர் உணர்ச்சிகளை கட்டுப் படுத்தி இருந்தது தெரிந்தது.

ஒரு கட்டத்தில் உணர்ச்சிகளை அடக்கமுடியாமல் அழுது விட்டார். இந்தப் போட்டியில் இரு அணிகளும் எந்த கோல்லும் அடிக்காததால் ஆட்டம் டிரா ஆனது.

## இலங்கை 257 ஓட்டங்கள் குவிப்பு அசத்திய பிரர்ட் 'ஹாட்ரிக்' சாதனை



இலங்கைக்கெதிராக நடந்து வரும் 2வது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து வீரர் ஸ்டுவர்ட் பிராட் ஹாட்ரிக் சாதனை படைத்துள்ளார். இலங்கை அணி இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இதன் முதல் டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி போராடி முதல் போட்டியை டிரா செய்தது.

இந்நிலையில் 2வது டெஸ்ட் போட்டி லீட்ஸ் மைதானத்தில் நேற்று தொடங்கியது. இதில் நாணய சுழற்சியில் வென்ற இங்கிலாந்து முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது.

இதன்படி துடுப்பாட்டத்தை தொடங்கிய இலங்கைக்கு சீரான இடைவெளியில் விக்கெட்டுகள் சரிந்தன.

அனுபவம் வாய்ந்த வீரர்கள் மஹேலா ஜெயவர்த்தனே (22 ஓட்டங்கள்), அணித்தலைவர் மேத்யூஸ் (26 ஓட்டங்கள்) அதிக நேரம் நிற்கமுடியாமல் வெளியேறினர்.

சங்கக்கரா மட்டும் சிறப்பாக விளையாடி 79 ஓட்டங்கள் குவித்தார். பின்னர் அவரும் வெளியேற ஆட்டம் தலைகீழாக மாறியது.

சிறப்பாக விளையாடிய இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஸ்டுவர்ட் பிராட் தொடர்ச்சியாக 3 விக்கெட்டுகளை வீழ்த்தி ஹாட்ரிக் சாதனை படைத்தார்.

முந்தைய ஓவரின் கடைசி பந்தில் சங்கக்கராவை ஆட்டம் இழக்கச் செய்த அவர், தனது அடுத்த ஓவரின் முதல் இரு பந்துகளில் சன்டிமால் (45 ஓட்டங்கள்), எரங்கா (0) ஆகியோரை வெளியேற்றி ஹாட்ரிக் சாதனை புரிந்தார்.

மிகக் குறைந்த கட்டணத்தில் புதியவனில் விளம்பரம் செய்யுங்கள்

தேசிய நாளிதழ்களுக்கு நிகராக மன்னாரில் இருந்து வெளிவரும்
புதியவன் நாளிதழில் மிகக்குறைந்த கட்டணத்தில் உங்கள் விளம்பரங்களை வெளியிடலாம்

வீடு, காணி விற்பனை
வீடு, கடை வாடகை
வாகன விற்பனை/வாடகைக்கு
திருமண சேவை
செல்லப்பிராணிகள் விற்பனைக்கு
கல்விச் சேவை

ஆகிய வற்றுக்கான விளம்பரங்களை வெறும் 400/= ரூபாவில் இருந்து பிரசுரிக்கலாம்.

மரண அறிவித்தல், 31ஆம் நாள் அறிவித்தல். ரூபாய் 500/= மட்டுமே.

ஏனைய அனைத்து விளம்பரங்களுக்கும் ரூபா 500/= இல் இருந்து

இன்றே அழையுங்கள். உங்கள் அனைத்து வியாபாரத் தொடர்புகளும் நன்றே பெருகிட வாருங்கள் புதியவன் அலுவலகத்திற்கு இல்லையேல் அழையுங்கள் கீழ்வரும் அலைபேசி இலக்கங்களை

விளம்பரப்பிரிவு
புதியவன்
பிரதான வீதி, மன்னார்.
023 2223545/077 7802720

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை #87 பிரதான வீதி, மன்னாரில் அமைந்துள்ள நித்திலம் வெளியீட்டகத்தால் 22.06.2014 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.